
ஏ. ஆர். சகுந்தலா தனது மேனியை லக்ஸ் டாய்லட் சோப்பினுல் அழகாகவும், அப்பழுக்கற்றதாகவும் வைத்துக்கொள்கிருர் . . .



எழில்மிக்க, திறமைவாய்ந்த இந் நட்சத்திரம் தனது சருமத்திற்கு தவறுமல் அழகு படுத்திக்கொள்ளும் முறை ஒன்றை கையாள்வதன் முக்கியத்தை நன்கு அறிந்திருக்கிருர். அவர் எப்பொழுதும், தனது அழகிய மழமழப்பான மேனிக்கு லக்ஸ் டாய்லட் சோப்பின் இனிய பாதுகாப்பை அளிக்கிருர். தனது மேனியை மாசு மருவற்றதாக வைத்துக்கொள்ள, தனக்குத்தெரிந்த முதல் தரமான வழி இதுவே என்று சொல்கிருர், நீங்களும் ஏன் அதை கையாளக்கூடாது? இந்த சுத்தமான வெண்ணிறம்கொண்ட சோப்பின் மிருதுவான நறுமணங்கமழும் நுரையை நீங்கள் விரும்புவீர்கள்.

மூபாக் பிக்சர்ஸாரின் "பில்ஹணு" என்ற சரித்திர சம்பந்தமான படத்தில் ஏ. ஆர். சகுந்தலா தோன்றுகிருர். இப்படத்தில் அவரது நடிப்பு மிக கவர்ச்சிகரமாக அமைந்திருக்கும்.



லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களுக்கு அழகுதரும் சோப்

LTS. 164-22-40 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

வெளிவரும் தேதியை எதிர்பாருங்கள்!

வி. என். ஜானகி
பி. எஸ். கோவிந்தன்
காளி என். ரத்தினம்
சி. டி. ராஜகாந்தம்
டி. எஸ். துரைராஜ்
பத்மா, சரஸ்வதி
செல்லம் நடிப்பது



டைரக்ஷன்:-
T. R. சுந்தரம்
B.A.B.Sc., (Leeds)


மாடர்ன் தியேட்டர்ஸின்

1000 .... தலைவாங்கி ....

அபூர்வ சிந்தாமணி


4A
Policy
WORLD WIDE POLICY NO.
வருஷக்கணக்கில் டிவிடெண்டு
(இலாபம்) கொடுக்கக் கூடியது.
தங்க முனை
சேமிப்பு
. . . என்றென்றும் மெண்ட்மோர் ஆடோப்ளோ பேனா இந்தியாவின் சீதோஷ்ண நிலையைத் தாங்கக்கூடிய பொருள்களால் விசேஷமாக செய்யப்பட்டது. ட்ராப் - பில்லிங், லிவர், ஸ்டட் - பில்லிங் முதலிய மாடல்களில் கிடைக்கிறது. அதனுடைய கெட்டியான நிப் 14 காரட் தங்கத்தால் செய்யப்பட்டது. ஆஸ்மி இருடியத்தில் தோய்க்கப்பட்ட முனையோடுகூடியது. ஒவ்வொரு பேனா குழலின்மேலும் நிப் பின்மேலும் மெண்ட்மோர் என்ற பெயர் செதுக்கப்பட்டிருக்கிறதா என்று கவனித்துப்பாருங்கள். உங்கள் ஆயுள்கால சேவையின் அஷ்யூரன்ஸ்.
மெண்ட்மோர்
ஆடோப்ளோ.
இங்கிலாந்தில்
செய்யப்பட்டது.
ரூ.15/-
MENTMORE
Auto-Flow
FOUNTAIN PEN
இந்திய விசாரணைகளுக்கு உரிமைபெற்ற முழு வினியோகஸ்தர்கள்:
15, கந்தப்ப செட்டித் தெரு, மதராஸ்

சிறந்த போட்டோக்களுக்கு



போட்டோவைத் தொழிலாகக் கொண்டவர்களுக்கும் சரி, பொழுது போக்காகக் கொண்டவர்களுக்கும் சரி, உங்கள் காமிராவிற்கு மிகப் பொருத்தமான அதிவேகம் பொருந்திய பிலிம் இதோ இருக்கிறது — வீட்டினுள் எடுப்பதற்கும் வெளிப்புறக் காட்சிகளுக்கும் உகந்தது. கெவார்ட்ஸ் பான்க்ரோமோஸாவின் வர்ண பேத சக்தி ஓர் பிரத்யேக அம்சம்.

உள்ளூர் போட்டோ சாமான் விற்பனையாளரிடம் பாருங்கள்

இந்தியாவில் மொத்த விற்பனையாளர்கள்

அல்லைய்ட் போட்டோகிராபிக்ஸ் லிமிடெட்

பம்பாய் - கல்கத்தா - மதராஸ்


FAS-L-1
All work & No play
makes Jack
a dull boy..
சுத்தமே சுகந்தரும்
வேலையும் ஓய்வும் ஆரோக்ய வாழ்க்கைக்கு அவசியம்தான். தேகத்தின் ஆரோக்கியத்திற்கும் மூளையின் சுறுசுறுப்பிற்கும் அது அவசியமானது. சுத்தமாய் இருத்தலே. "மலபார் லிம்டா சோப்" சுத்தத்தையும் புத்துணர்ச்சியையும் தருகிறது.
அதன் நுரை சருமத்தில் ஊடுருவிச் சென்று அசுத்தங்களைப் போக்குகிறது. சருமத்திற்கு ஓர் பளபளப்பையும் மிருதுத் தன்மையையும் அளிக்கிறது. உங்களுக்கு ஏற்ற சோப் அதுவே.
LIMDA
LIMDA
மலபார்
லிம்டா சோப்
வெஜிடபில் சோப் ஒர்க்ஸ்
கள்ளிக்கோட்டை.
ப்ரொப்ரைடர்ஸ்: சேட். N.P.&Co கள்ளிக்கோட்டை பம்பாய் 2 சென்னை 1.

கல்கி

பொருளடக்கம்

மலர் 7 இதழ் 19	டிசம்பர் 7	சர்வஜித்து௵ கார்த்திகை 22

"போற்றி போற்றி ஓராயிரம் போற்றி நின்
பொன்னடிக்குப் பல்லாயிரம் போற்றிகாண்!"

என்று புதுமைக் கவி பாரதியார் புதுமைப் பெண்ணுக்குப் போற்றி கூறினார். இவ்விதம் பாமாலை சூட்டப்பெற்ற புதுமைப் பெண்கள் சென்ற இருபது ஆண்டு காலமாக வருஷந்தோறும் மகாநாடு கூடி இந்தியப் பெண்குலத்தின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டு வருகிறார்கள். இந்தியாவின் தேசியப் போராட்டங்களில் இவர்கள் எப்போதும் முன்வரிசையில் நின்று வந்திருக்கிறார்கள்; மாதர் சுதந்திரத்துக்காகவும் போராடி வந்திருக்கிறார்கள்.



அகில இந்திய மாதர் சங்கத்தின் இருபதாவது ஆண்டு மகாநாடு நாளது டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் சென்னை மாநகரில் நடைபெறுகிறது. அகில இந்தியாவிலிருந்தும் நாரீமணிகள் பலர் விஜயம் செய்கிறார்கள்.

இந்த மகாநாட்டை நடத்தி வைப்பதற்காக வரவேற்புக் கமிட்டி ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இக்கமிட்டியின் தலைவரான ஸ்ரீமதி அம்புஜம்மாள் நமது இந்த இதழின் அட்டைப் படத்தில் தோற்றமளிக்கிறார்.

தமிழ்நாடு தந்த தேசபக்த சிம்மங்களில் ஒருவரான ஸ்ரீ எஸ். சீனிவாசய்யங்காரின் செல்வப் புதல்வி ஸ்ரீமதி அம்புஜம்மாள். காந்தி மகானுடைய சத்தியாக்கிரஹ அஹிம்சைப் போராட்ட முறையில் ஸ்ரீ எஸ். சீனிவாசய்யங்கார் நம்பிக்கையில்லாதவர். ஆனால் அவருடைய புதல்வி ஸ்ரீமதி அம்புஜம்மாள் மகாத்மாவினிடம் அளவில்லாத பக்தியும் அவருடைய திட்டங்களில் பரிபூரண நம்பிக்கையும் கொண்டவர். தந்தையின் பரிபூரண ஆசியுடன் காந்தி மகானுடைய ஆசிரமத்துக்குச் சென்று சில நாள் தங்கியிருந்தார். உப்பு சத்தியாக்கிரஹப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை புகுந்து தவம் செய்தார். அன்று முதல் இன்று வரையில் மகாத்மாவிடம் இடையறா பக்தியுடன் நிர்மாணத் தொண்டு புரிந்து வருகிறார்.

அகில இந்திய மாதர் மகாநாடு சென்னையில் சிறப்பாக நடைபெறுவதற்குச் சென்னைவாசிகளும் தமிழ் மக்களும் பரிபூரண உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். பெண்மணிகள் வரவேற்புக் கமிட்டி அங்கத்தினராகச் சேர்ந்து உதவி புரியலாம். மற்றவர்கள் நன்கொடைகள் அளித்து உதவி செய்யலாம். நன்கொடை அனுப்பவேண்டிய விலாசம்:— காரியதரிசிகள், மாதர் மகாநாடு வரவேற்புக் கமிட்டி, "மேரு," மயிலாப்பூர், சென்னை.

கல்கி

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிட்டடி பாப்பா —பாரதியார் | இதழ் 19

என்ன சேதி?

ராஜாஜி திருவிழா

ராஜாஜி அவர்களின் எழுபதாவது ஜன்மதினக் கொண்டாட்டத்தை வருகிற டிசம்பர் 10௳ முதல் 16௳ வரையில் கொண்டாடுவது என்று சென்னை நகரிலுள்ள ராஜாஜி அன்பர்கள் கூட்டம் கூடித் தீர்மானம் செய்திருக்கிறார்கள். இதையே ஆதாரமாக வைத்துக்கொண்டு தமிழ் நாடெங்குமுள்ள ராஜாஜியின் அன்பர்கள் டிசம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் ராஜாஜி விழாக் கொண்டாடும்படி கேட்டுக் கொள்கிறோம். சென்னை நகரில் ராஜாஜி விழா நடத்துவதற்கென்று பிரதம மந்திரி ஸ்ரீ ஓமந்தூர் ரெட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட கமிட்டி ஏற்பட்டிருப்பது பெரிதும் மகிழ்ச்சிக்குரிய விஷயம். விழாக் கொண்டாடுவது தவிர, ராஜாஜி மணி மலர் வெளியிடுதல், ராஜாஜியின் பெயரால் மாணவர்களுக்கு உதவிச் சம்பளங்கள் அளித்தல் முதலிய பல காரியங்களையும் மேற்படி கமிட்டியார் மேற்கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள் அனைவரும் தங்கள் பரிபூரண ஒத்துழைப்பை இந்தத் திருப்பணிக்கு அளிக்கக் கோருகிறோம். ராஜாஜி விழாக் கொண்டாட்டம் நடத்துவதில் உற்சாகமும் ஊக்கமும் காட்டி, ராஜாஜி அன்பர்களைத் தமது இல்லத்தில் கூட்டி, மேற்படி விழாக் கமிட்டி அமைப்பதற்குக் காரணமாயிருந்த சென்னை ஷெரிப் ஸ்ரீ ராமசாமி நாயுடு அவர்களைப் பாராட்டுகிறோம். கொண்டாட்டச் செலவுகளுக்காக நன்கொடை கோரிப் பிரதம மந்திரி வேண்டுகோள் விடுத்திருக்கிறார். நன்கொடை அனுப்ப விரும்புவோர் (1) கனம் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், பிரதம மந்திரி, சென்னை என்ற விலாசத்துக்காவது (2) ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு, ஷெரிப், 41, ஹன்மான் ரோட், தியாகராஜ நகர், சென்னை என்ற விலாசத்துக்காவது அனுப்பி வைக்கலாம்.

ராஜாஜி உருவப் படம்

நாளது டிசம்பர் மாதத்தில் தமிழ் நாடெங்கும் ராஜாஜி திருவிழா கொண்டாடப்படுவதை முன்னிட்டு, மலர்ந்த முகத்துடனும் மலர் மாலையுடனும் கூடிய ராஜாஜியின் உருவப் படம் "கல்கி" காரியாலயத்தாரால் அச்சிடப்பட்டு வருகிறது. படத்தின் அளவு அகலம் 9 அங்குலம், உயரம் 11½ அங்குலம். விலை தபாற் செலவு உள்பட அணா 12. வேண்டுவோர் மானேஜர், "கல்கி", கீழ்ப்பாக்கம், சென்னை என்ற விலாசத்துக்கு எழுதவும்.

மாணவர்களுக்கு விடுதலை!

மகா ஜனங்களுக்கு அரசியல் விடுதலை கிடைத்து விட்டது! மாணவர்களுக்கும் விடுதலை கிடைக்க வேண்டாமா? அரசியல் விடுதலை யல்ல, அறியாமையிலிருந்தும் அன்னிய பாஷையின் ஆதிக்கத்திலிருந்தும் விடுதலை! கணிதம், பூகோளம், சரித்திரம், விஞ்ஞானம், சித்திரம், தாவர சாஸ்திரம் முதலிய பல்வேறு சாக்குகளால் திக்குமுக்காடிக் கொண்டிருக்கும் மாணவர்களின் மூளைக்கு விடுதலை கிடைக்கும் காலம் வந்து கொண்டிருக்கிறது. இதற்கு முதற்படியாக சென்னை சர்க்கார் கல்வி இலாகா டைரக்டர் ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார். மத்தியதரக் கல்விச்சாலைகளில் திருக்குறளைப் பாடமாக வைக்க வேண்டுமென்பதே அவரது உத்தரவாகும். மகாகவி ஷேக்ஸ்பியரின் சிறப்பை அறியாத பிரிட்டிஷ் மாணவன் இருக்க மாட்டான். கெத்தேயின் உயர்ந்த உபதேசங்களை அறியாத ஜெர்மன் மாணவன் இருக்கமாட்டான். ஆனால், திருக்குறளின் பெருமையை அறியாத மாணவன் தமிழ் நாட்டில் இல்லை என்று உறுதியாகக் கூறமுடியுமா? வெட்கக்கேடான அத்தகைய நிலைமைக்கு, மேற்படி உத்தரவின் பலனாகப் பரிகாரம் ஏற்படுமென்பது நிச்சயம். பால் குடிக்காத

பாவர் இல்லை. அதுபோல, குறள் கற்காத வரும் இல்லை என்ற நிலைமை தமிழ் நாட்டில் ஏற்பட வேண்டும்.

தீ தணிந்தது!

சமீபத்தில் லண்டனுக்குச் சென்றிருந்த லார்டு மவுண்ட்பாட்டன், அங்கு பண்டித ஜவாஹர்லால் நேருவின் படத்தைத் திறந்து வைத்தது எல்லோரும் அறிந்த விஷயம். அப்போது லார்டு மவுண்ட்பாட்டன் பேசுகையில், ஜவாஹர்லால்ஜியின் உத்தம குணங்களை உணர்ச்சி ததும்பப் பாராட்டிப் பேசினார். அவ்வமயம் அவர் பிரிட்டனுக்கு மாத்திரமல்ல, உலகத்துக்கே ஒரு உண்மையை எடுத்துக் கூறினார். இந்தியாவில் மூண்டுள்ள கலகத் தீ மூன்று சத விகித ஜனங்களிடையேதான் பரவியிருக்கிறதென்றும், மீதியுள்ள தொண்ணூற்றேழு சத விகித ஜனங்களும் அமைதியாகவே வாழ்கின்றார்களென்றும் கூறினார். அத்தகைய நிலைமைக்குக் காரணம் என்ன? எத்தனையோ அக்கிரமங்கள் செய்திருப்பினும் பாகிஸ்தான்மீது இந்திய சர்க்கார் வஞ்சம் தீர்க்கப் போவதில்லை என்று இந்தியா பார்லிமெண்டில் பண்டித நேரு அறிவித்திருப்பதே அதற்குக் காரணம். இந்திய சர்க்கார் ஆரம்பத்திலேயே வஞ்ச முறைகளைக் கைக்கொண்டிருப்பார்களாயின், இன்று கலகத் தீ காலாக்னி போல் தேசமெங்கும் சூழ்ந்திருக்கும். அன்பு உருவங்களான, அறிவுக் களஞ்சியங்களான நம் தலைவர்கள் நெறி தவறாமலும் நிலை குலையாமலும் இருந்ததால்தான், மகத்தான அப் பிரச்னையைத் தீர்க்க முடிந்தது. மலைபோல் எழுந்த அகதிகள் பிரச்னை இன்று பனிபோல் மறைந்து வருவதாகப் பண்டித நேரு அறிவித்திருப்பதைக் கண்டு இந்திய மகாஜனங்கள் பெருமிதம் அடைவார்கள் என்பதில் ஐயமென்ன?

ஆகாச வெடி

“ஆஸ்டின் ஆஸ்மன் ஸ்பார் என்னும் பிரபல பிரிட்டிஷ் சித்திரக்காரர் தமக்கு முன்னால் தோன்றிய ஒரு பேயைக் கண்டு மிரளாமல், அதையே படமாக வரைந்து விட்டார்.”

—லண்டன் செய்தி.

ஆனால், அவர் வரைந்த படத்தைக் கண்டு அந்தப் பேய் மிரளாமல் இருந்ததா?”

★

“காஷ்மீரத்தை ஆக்கிரமித்து அதில் தனக்கு ஒரு மாளிகை கட்டத் திட்டமிட்டிருந்தார் ஜின்னா என்று காஷ்மீர் பிரதம மந்திரி மகாஜன் அறிவிக்கிறார்.”

—ஸ்ரீநகர் செய்தி.

ஜனாப் ஜின்னாவின் ‘மனமாளிகை’ தகர்ந்து போனதற்கு நமது மனமார்ந்த அநுதாபம்.

★

“சர்ச்சுகளில் தங்க எல்லாச் சமூகத்தினருக்கும் அனுமதியளிக்க செகந்திராபாத் கிறிஸ்துவர்கள் முடிவு செய்துள்ளனர்.”

—பத்திரிகைச் செய்தி.

தங்கமான முடிவுதான்!

“ஆள்வார் சமஸ்தானாதிபதி நிர்வாகத்தை மூன்று பொதுஜனப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க முடிவு செய்துள்ளார் எனத் தெரிகிறது.”

—ஆள்வார் செய்தி.

இனிமேல் ஆள்வார் சமஸ்தானத்தைப் பொதுமக்கள்தான் ஆள்வார்கள் போலிருக்கிறது!

★

“ஆட்டம் பாதியில் நின்று போனதால் கோபங்கொண்ட ஜனங்கள் ஒரு பகுதியிலிருந்த ஆசனங்களை கீழே போட்டு அடித்து நாசப்படுத்தினர்.”

—கல்கத்தா செய்தி.

மறுநாள் அந்தப் பகுதியில் உட்கார்ந்து ஆட்டம் பார்த்தவர்கள் ஆசனங்களின் ‘ஆட்டம் பிரமாதமாக இருந்தது!’ என்று கூறியிருப்பார்கள்.

★

“நைக்கும் நூல் சப்ளை நிலைமையைப் பற்றி உதவி ஜவுளி கமிஷனர்கள் மாகாண ஜவுளி கமிஷனரிடம் கூறினார்கள்.”


—சென்னைச் செய்தி

மனதில் நைந்தபடி கூறியிருப்பார்கள் என நம்பலாமல்லவா?

நிகழ்ச்சிச் சித்திரம்



- சாஸ்திரி


4 ....யுத்த தளவாடத் தொழிற்சாலை முதலாளிகளையும் கொழுக்க வைத்தது,....
நம் பாடு கொண்டாட்டம் தான்! மகா யுத்தம் முடிந்து விட்டதேயென்று சோர்ந்திருந்த நமக்கு இப்படி ஆர்டர்கள் வந்து குவிகின்றனவே!
இந்தோனேஷியா
2. இந்தோ சீன
3. சீன
4. பர்மா
5. கிரீஸ்
6. ஹைதராபாத்
பாகிஸ்தான்
அராபியர்கள்
யூதர்கள்
5 ....அன்று அவ்விதம் கோஷமிட்ட அதே ஜின்னாவை,....
இஸ்லாத்துக்கு ஆபத்து
இந்தியாவைப் பிரித்தே தீர வேண்டும்
பாகிஸ்தான் ஜிந்தாபாத்!
6 ....இன்று இவ்விதம் கோஷமிடும்படியும் செய்திருக்கிறது!
அகண்ட அராபிஸ்தான் ஜிந்தாபாத்!
பாலஸ்தீனயா? பிரிப்பதா? ஐயோ!
இஸ்லாத்துக்கு ஆபத்து

அரை வருஷக் கணக்கு

புயல் அடங்கியிருக்கிறது; மழையும் விட்டிருக்கிறது; கரு மேகங்கள் கலைந்து வருகின்றன; மின்னொளியும் தோன்றுகிறது: ஆனால் தூவானம் மாத்திரம் விடவில்லை.

சுதந்திர இந்திய சர்க்கார் நிதி மந்திரி ஸ்ரீ ஆர். கே. ஷண்முகம் செட்டியார் இந்தியா பார்லிமெண்டில் சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டத்தின் சாரம் அதுதான்.

நிதி மந்திரி, இந்திய மகாஜனங்கள் சகலருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய இரண்டு முக்கிய விஷயங்களை வெளியிட்டிருக்கிறார்.

அவையாவன:

1. பாரத நாட்டின் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கிறது.

2. பொருளாதார, நிதி விஷயங்களை யொட்டி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் உள்ள வேற்றுமைகள், மத்தியஸ்த சபைக்குப் போகாமலே பரஸ்பர அன்னியோன்னிய பாவத்துடன் தீர்க்கப்படும்.

சுதந்திர சர்க்கார் ஏற்பட்ட பின் தேசத்தின் நிதி நிலைமையில் நம்பிக்கை குறைந்தது. மகத்தான பல்வேறு பிரச்னைகளையும் சமாளித்து, ஆக்க வேலைகளைக் கைக்கொள்வதற்கான நிதி பலம் சர்க்காருக்கு இருக்குமா வென்று பலரும் கலங்கினார்கள்.

மற்றும், கைத்தொழில்கள் விஷயமாக சுதந்திர அரசாங்கம் எத்தகைய முறைகளை எடுத்துக் கொள்ளுமோ வென்றும் கவலைப்பட்ட முதலாளிகள் உண்டு.

ஆனால், சர்க்காரின் நிதி பலம், கைத்தொழில் கொள்கை, வெளி நாட்டுக் கொள்கை எல்லாம் இப்போது தெளிவாகத் தெரிந்து விட்டன.

• • •

ஸ்ரீ ஷண்முகம் செட்டியார் சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டமானது சுதந்திர இந்திய சர்க்கார் ஏற்பட்ட சென்ற ஆகஸ்டு மாதம் 15ந் தேதியிலிருந்து அடுத்த வருஷம் மார்ச்சு மாதம் 31ந் தேதி முடிய சர்க்காரின் வரவு செலவுகளையே குறிப்பிடுகிறது.

இந்த இடைக்காலத் திட்டத்தின்படி சர்க்காரின் வரவைக் காட்டிலும் செலவு 26½ கோடி ரூபாய் அதிகமாகிறது.

அதாவது, மேற்படி அரை வருஷ காலத்துக்குச் சர்க்காரின் வரவு 171 கோடியே 15 லக்ஷம் ரூபாய் என்றும், செலவு 197 கோடியே 39 லக்ஷம் ரூபாய் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

அதிகச் செலவான 26 கோடியே 24 லக்ஷம் ரூபாயை ஈடு செய்ய நிதி மந்திரி புதிய வரிகளெதுவும் விதிக்காமலிருப்பதிலிருந்தே, சர்க்காரின் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கிற தென்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

அர்த்த சாஸ்திர நிபுணரான நிதி மந்திரி, எதிர்கால நிலைமையை யொட்டி உறுதி கூறியிருப்பது, அவ் விஷயமாக இருக்கக் கூடிய அற்ப சந்தேகத்தையும் அறவே அகற்றுவதாக இருக்கிறது.

ஏனெனில், எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சில தாற்காலிக செலவினங்களே மேற்படி நிலைமைக்குக் காரணம்.

அதாவது, பாகிஸ்தான் படுகொலைகள் காரணமாக ஓடி வந்து அடைக்கலம் புகுந்த லக்ஷக்கணக்கான அகதிகளுக்காக 22 கோடி ரூபாய் செலவேற்பட்டிருக்கிறது.

உணவுப் பொருள்கள் இறக்குமதியாகும் விஷயமாக சர்க்கார் 22½ கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

அவ்விரண்டு செலவினங்களும் தாற்காலிகமானவையே.

எனவே, அவ்வினங்களை நீக்கிவிட்டுப் பார்ப்போமாயின், சர்க்காரின் செலவைக் காட்டிலும் வரவு அதிகம் என்பது புலனாகும்.

ஆகையால், சர்க்காரின் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கிறதென்று நிதி

மந்திரி குறிப்பிட்டிருப்பது முற்றிலும் சரியே.

அதனாலேயே, புதிய வரிகள் விதிக்க வேண்டிய நிலைமையோ, நிர்ப்பந்தமோ இப்போது ஏற்படவில்லை.

எனினும், பருத்தி நூல் ஒரு பவுண்டுக்கு ஆறு அணா விதமும், ஜவுளி ஒரு கெஜத்துக்கு நாலு அணா விதமும் ஏற்றுமதி வரி மாத்திரம் உயர்த்தப் படுமென்று நிதி மந்திரி அறிவித்திருப்பது, தேசத்தில் உடைப் பஞ்சம் ஏற்பட்டுள்ள இன்றைய நிலைமையில் வரவேற்கத் தக்கதே.

உடை உற்பத்தி குறைந்திருக்கிறது. உள்நாட்டுக்குத் தேவையான உடைகளையே இந்திய நெசவு மில்கள் சப்ளை செய்ய முடியாத நிலையில் இருக்கின்றன. இந்நிலைமையில் பருத்தி நூலுக்கும் ஜவுளிக்கும் ஏற்றுமதி வரி விதிப்பதால் என்ன குடி முழுகிப் போய்விடப் போகிறது?

• • •

ஸீத் தொழில்களைத் தேசிய மயமாக்கும் கொள்கை, அதாவது சர்க்காரே ஏற்று நடத்தும் கொள்கை அமுலுக்கு வந்தாலும் கூட, அந்துறையில் தனிப்பட்டவர்களின் முயற்சிக்கும் வேண்டிய இடம் இருக்கிறதென்பதை நிதி மந்திரி எடுத்துக் காட்டியிருக்கிறார்.

முதலாளிகளுக்கு உற்சாக மூட்டும் அவ்விஷயத்தைக் குறிப்பிட்டுள்ள நிதி மந்திரி தொழிலாளர்களை மறந்துவிடவில்லை.

எதிர் காலத்தில் ஜனங்கள் சுபிட்சமாக வாழ வேண்டுமாயின், அதற்கு ஒரே ஒரு வழிதானிருக்கிறது. அது தான் உற்பத்திப் பெருக்கம்.

குறிப்பாக, உணவுப் பொருள்களின் உற்பத்தியும், உடைகளின் உற்பத்தியும் பெருக வேண்டும்.

உற்பத்தி பெருகுவது தொழிலாளர்களின் உற்சாகமான உழைப்பையே பொறுத்திருக்கிறது.

நிதி மந்திரி குறிப்பிட்டிருப்பதுபோல் கட்டளைகளாலும், கெடுபிடி சட்டங்களாலும் உற்பத்தியை அதிகமாக்கி விட முடியாது. தொழிலாளர்களின் ஹிருதய பூர்வமான ஒத்துழைப்பைப் பெற்றாலன்றி, உற்பத்தி பெருக முடியாது.

தொழிலாளர்களின் மனப்பான்மையே அடியோடு மாற வேண்டும். இன்று தாங்கள் சுதந்திர இந்தியாவில் வாழ்கிறோம் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். பாரத நாட்டின் எதிர்கால சுபிட்சத்துக்குத் தாங்கள்தான் ஆணி வேர் என்பதைத் தொழிலாளர்கள் மறந்து விடக் கூடாது. தங்களுடைய தவறால் உணவு, உடை உற்பத்தி குறைந்ததென்ற கெட்ட பெயருக்கு அவர்கள் ஆளாகிவிடக் கூடாது.

கீழ்க்கண்ட புள்ளி விவரங்களைத் தொழிலாளர்கள் ஊன்றிக் கவனிப்பார்களாயின், நிதி மந்திரி கூறுவதின் கருத்தை நன்கு அறிந்து கொள்ளுவார்கள்.

சென்ற வருஷம் உடை உற்பத்தியில் நூறுகோடி கெஜம் குறைந்திருக்கிறது. எஃகு உற்பத்தியில் நாலு லட்சம் டன்னும், சிமெண்ட் உற்பத்தியில் ஏழு லட்சம் டன்னும் குறைந்திருக்கின்றன.

தொழிலாளர்களின் கடமைகளை வற்புறுத்தியுள்ள நிதி மந்திரி, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்.

தொழிலாளர்களுக்குத் திருப்தியளிக்கக் கூடிய ஒரு திட்டத்தைக் கூடிய சீக்கிரம் சர்க்கார் வகுப்பார்களென்றும், தொழில்களில் கிடைக்கும் லாபத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கு கொடுக்கும் விஷயமாக சர்க்கார் ஆலோசித்து வருவதாகவும் நிதி மந்திரி கூறியிருப்பது தொழிலாளர்களுக்கு மிகவும் உற்சாக மூட்டும் என்பதில் சந்தேகமில்லை.

• • •

சென்ற ஆகஸ்டு மாதத்திலிருந்து அடுத்த மார்ச்சு மாதம் முடிய இந்தியாவின் ராணுவச் செலவு 93 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

அதாவது, இந்தியாவின் ராணுவச் செலவு ஒரு வருஷ காலத்துக்குச் சுமார் 150 கோடி ரூபாய் ஆகிறது.

மேற்படி தொகை மிகவும் அதிகமாயினும், தற்போதைய நிலைமையைக் கவனிப்பவர்கள் அதை ஆட்சேபிக்கவே மாட்டார்கள்.

முன்பு இந்தியாவின் ராணுவச் செலவு வருஷத்துக்கு 50 கோடியாக இருந்தபோதே, இந்திய மகா ஜனங்களும் தலைவர்களும் அதைப் பலமாகக் கண்டித்து வந்தனர்.

ஆனால், இன்றைய நிலைமை முற்றிலும் வேறாகும்.

முன்பு பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக இந்திய ராணுவம் உபயோகிக்கப்பட்டு வந்தது. இன்றோ, இந்தியாவின் சுதந்திரத்தையே பாதுகாக்க வேண்டிய கடமையில் இந்திய ராணுவம் முக்கிய பங்கெடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

இப்போது காஷ்மீரத்தில் நிகழ்ந்து வரும் சம்பவங்கள், இந்திய ராணுவத்தின் அவசியத்தையும், பெருமையையும் வெளிப்படுத்தியிருக்கின்றன.

ராணுவச் செலவு அதிகமாகியிருப்பதற்கு, தற்போதைய அசாதாரண வாழ்க்கை நிலைமையும் முக்கிய காரணமாகும்.

* * *

சகல ஜனங்களின் மனதையும் ஆட்கொண்டுள்ள கண்ட்ரோல்கள் விஷயமாகவும் நிதி மந்திரி தமது கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

கண்ட்ரோல்கள் முறை விபரீதமானதொன்று என்பதை ஒப்புக் கொள்ளாதவர்கள் இல்லை. அவற்றை ஒழித்துவிட வேண்டுமென்பதையும் எல்லாரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

ஆனால், கண்ட்ரோல்களை உடனே ரத்துச் செய்வதா, அல்லது அவை இன்னும் கொஞ்ச காலத்துக்கு இருந்து தொலைய வேண்டுமா என்பது பற்றியே இப்போது அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருக்கிறது.

இரண்டொரு முக்கிய உணவுப் பொருள்களுக்கு மாத்திரம் கண்ட்ரோல் இருப்பதால் யாதொரு பலனும் ஏற்படாதென்றும், தவிர கண்ட்ரோல் விலைகளின்படி பத்து சத விகித ஜனங்கள்தான் உணவுப் பொருள்களை வாங்குகின்றனரென்றும், மற்றவர்கள் கறுப்பு மார்க்கெட்டிலிருந்து வாங்கியே காலந் தள்ளுகின்றனரென்றும் நிதி மந்திரி அபிப்பிராயப்படுகிறார்.

உற்பத்தி அதிகமானாலொழிய உணவுப் பொருள்களின் கண்ட்ரோலை எடுப்பது ஆபத்தாகும் என்பது பலருடைய அபிப்பிராயமாகும்.

எனவே, எங்கு உணவுப் பொருள்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கண்ட்ரோலை ரத்துச் செய்து விடுவார்களோவென பொதுஜனங்களிடையே கலக்கம் ஏற்பட்டிருப்பது இயற்கையே.

எனினும், அவ்விஷயத்தில் மகா ஜனங்கள் பீதியடைய வேண்டிய அவசியமேயில்லை.

ஜனங்களுக்காக ஜனங்களால் நடத்தப்படும் ஜனங்களுடைய சர்க்கார், ஜனங்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் காரியத்தை ஒருகாலும் செய்ய மாட்டார்கள்.

உணவுப் பிரச்னையை யொட்டி சர்க்கார் அவசரப்பட்டோ, ஆய்ந்தோய்ந்து பாராமலோ எதுவும் செய்து விட மாட்டார்களென்று காங்கிரஸ் அக்ராஸனரான பாபு ராஜேந்திரப் பிரசாத் பம்பாயில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் உறுதி கூறியிருப்பது, ஜனங்களின் பீதியைப் போக்குமென்றே நம்புகிறோம்.

கண்ட்ரோல்கள் விஷயமாக பல மாகாண சர்க்கார்களையும் கலந்தாலோசித்த பின்னர்தான், இந்திய சர்க்கார் ஒரு முடிவுக்கு வருவார்கள் என்றும் பாபு ராஜேந்திரர் குறிப்பிட்டிருக்கிறார்.

இச்சந்தர்ப்பத்தில், அவர் கூறியுள்ள மற்றொரு முக்கிய யோசனையைச் சகலரும் கவனிக்க வேண்டியது அவசியமாகும்.

"இந்தியா விவசாயம் தழைத்த நாடாகும். எனவே, இனி நாம் உணவுப் பொருள்களுக்காகப் பிற நாடுகளை எதிர்பார்க்கும் விபரீதத்தை விட்டொழிக்க வேண்டும். நமது நாட்டினருக்கு வேண்டிய உணவு நம் நாட்டிலேயே உற்பத்தியாக வேண்டும்.

"ஒரு ஏக்கருக்கு ஒரு மணங்கு வீதம் தானிய உற்பத்தி அதிகமானால் கூட, ஒரே வருஷத்தில் நாம் உணவு நெருக்கடியைச் சமாளித்து வெற்றி பெறுவோம்.

"புதிய கருவிகளைக் கொண்டு வேளாண்மை முறைகளை அபிவிருத்தி செய்வதே, அவ்வாறு வெற்றி பெறுவதற்குற்ற வழியாகும்."

பாபு ராஜேந்திரரின் மேற் கூறிய யோசனைக் கிணங்க, விவசாயிகளுக்கு உதவியளித்து உணவு உற்பத்தியைப் பெருக்க சர்க்கார் பல் வேறு முறைகளையும் கைக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

எனவே, கண்ட்ரோல்கள் ஒழிவதும், உணவு உற்பத்தி பெருகுவதும் ஒன்றாக நிகழுமென்று நம்புகிறோம்!



ஆடல் பாடல்

"கர்நாடகம்"



ஓரிரவு

தற்காலத்து நாடகக் கலையைப் பற்றிப் பேசும்போதெல்லாம் ஆங்கிலம் படித்த மேதாவிகள் பெர்னார்ட் ஷாவையும், இப்ஸனையும் நினைத்து ஒரு குரல் அழுவது வழக்கம். "நாடகம், டீடகம் என்றெல்லாம் பேசிக்கொண் டிருக்கலாம். ஆனால் ஒரு பெர்னார்ட் ஷாவுக்கும் ஒரு இப்ஸனுக்கும் எங்கே போவது? திருடப் போக வேண்டியதுதான்!" என்று சொல்வார்கள். அப்படியெல்லாம் திருடவும் இருடவும் போக வேண்டாம், தமிழ்நாடு நாடகாசிரியர் இல்லாமல் பாழ்த்துப் போகவில்லை என்று சமீபத்தில் தெரிந்து கொண்டேன்.

இரண்டு வாரத்துக்கு முன்பு திருச்சிராப் பள்ளியில் "ஓரிரவு" என்னும் நாடகத்தைப் பார்க்க நேர்ந்தது. பார்த்ததின் பயனாக, "இதோ ஒரு பெர்னார்ட்ஷா தமிழ் நாட்டில் இருக்கிறார்! இப்ஸனும் இருக்கிறார்! இன்னும் கால்ஸ்வொர்த்தி கூட இருக்கிறார்!" என்று தோன்றியது.

நாடகக் கதையும், கதையை நாடகமாக அமைத்திருந்த பாணியும், கட்டுக் கோப்பும், காட்சிகளின் அமைப்பும், சம்பாஷணையும் அப்படி ஒன்றுக்கு மேல் ஒன்று சிறந்து விளங்கி என்னைத் திணற அடித்து விட்டன. நாடக முடிவில் என்னைப் பேசும்படி சொன்னபோது ஒன்றும் பேசத் தோன்றவில்லை. "நன்றாயிருக்கிறது; மிக நன்றாயிருக்கிறது; அதிக நன்றாயிருக்கிறது!" என்றுதான் திருப்பித் திருப்பச் சொல்ல வேண்டியிருந்தது.

'ஓரிரவு' என்னும் நாடகத்தின் ஆசிரியர் திரு சி. என். அண்ணாத்துரை.

காங்கிரஸுக்கும், தேசிய விடுதலை இயக்கத்துக்கும் எதிர்க்கட்சிகள் என்று கருதப்படும் திராவிடக் கட்சி, சுயமரியாதைக் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி ஆகியவற்றில் மிகச் சிறந்த எழுத்தாளரும், சொற்பொழிவாளரும் சிலர் இருக்கிறார்கள்.

உதாரணமாக, திருச்சி "நகர தூதன்" பத்திரிகையின் முதற் பக்கத்தில் "பேனா நர்த்தனம்" என்னும் தலைப்பில் ஒருவர் எழுதுகிறாரே, அவர் மிகப் பொல்லாத எழுத்தாளர். அவருடைய பேனா நர்த்தனத்தில், பரத நாட்டியத்திலே யுள்ள சகல ஜதி வகைகளையும் காணலாம். அப்படித் துள்ளிக் குதிக்கும் வேகமுள்ள தமிழ் நடையில் எதிர்க் கட்சிக்காரர்களையும், எதிர்க் கட்சிக் கொள்கைகளையும் அவர் தாக்குவார். நானும் பார்த்து வருகிறேன்; சென்ற இருபது வருஷத்துக்கு மேலாக அவருடைய கொள்கையும் ஒரே மாதிரியாக இருந்து வருகிறது; அவருடைய தமிழ் நடையும் ஒரேவித வேகமுள்ளதாயிருந்து வருகிறது. இவரால் தாக்கப்படுகிற மனிதர் நல்ல ரசிகராக மட்டுமிருந்தால், "தாக்கப் பட்டாலும் இப்படிப்பட்ட பேனாவினால் அல்லவா தாக்கப்பட வேண்டும்!" என்றுதான் அவருக்குத் தோன்றும்.



நாடக ஆசிரியர்

திராவிடக் கட்சி — சுயமரியாதைக் கட்சி — ஜஸ்டிஸ் கட்சிச் சொற் பொழிவாளர் சகல சமயம் தலை சிறந்து விளங்குகிறவர் திரு சி. என். அண்ணாத்துரை அவர்கள். (திரு ஈ. வெ. ரா. வுக்கு அடுத்தபடியாகத்தான் சொல்கிறேன். ஈ. வெ. ரா. வைப் போன்ற

வலிமை மிருந்த மேடைப் பேச்சாளர் தமிழ் நாட்டில் வேறு யாருமே இல்லை என்பது என் அபிப்பிராயம். இல்லாமற் போனால், அவ்வளவு பலமற்ற ஒரு கட்சியை இந்த வேளானும் விடாமல் தாக்கி நின்று போகுமிடங்களிலெல்லாம் இன்னமும் ஜனக் கூட்டம் சேர்க்க முடியுமா? திரு சி. என். அண்ணாத்துரையின் சொற்பொழிவுகள் சிலவற்றை நான் கேட்டிருக்கிறேன். "சொற்பொழிவு என்றால் இதுவல்லவா பொழிவு? தட்டுத் தடுமாறிச் சொற்களுக்குத் திண்டாடி நிற்பதை யெல்லாம் சொர்பொழிவு என்கிறோமே!" என்று எண்ணத் தோன்றும்.



கதாநாயகியும் காதலனும்

திரு அண்ணாத்துரையின் ஒரு சொற்பொழிவை நான் நேரில் கேட்கா விட்டாலும், நண்பர் ஒருவர் அதைப் பற்றிக் கூறியது என் மனதில் பதிந்தேயிருக்கிறது. சென்ற ஆண்டின் இறுதியில் சென்னையில் தமிழ் எழுத்தாளர் மகாநாடு நடந்தது. அச்சமயம் நான் பம்பாயில் அகப்பட்டுக் கொண்டேன். ரயில் பாதையும் உடைபட்டுப் போயிருந்தபடியால் மகாநாட்டுக்கு வர முடியவில்லை. திரும்பி வந்ததும் எழுத்தாளர் மகாநாட்டைப் பற்றி விசாரித்தேன். திரு அண்ணாத்துரையின் பிரசங்கத்தைப் பற்றி ஒருவர் சொன்னார். 'நமது கிராமங்களிலுள்ள ஜனங்கள் அறிவு விளக்கம் பெறாமல் பழைய குருட்டு நம்பிக்கைகளிலேயே ஆழ்ந்து கிடப்பதைப் பற்றி திரு அண்ணாத்துரை பேசினாராம். "மின்சார சக்தியைக் கண்டு பிடித்தவன் யார் என்று கிராமவாசியைக் கேளுங்கள். தெரியாது; ஆனால் யமனுக்கு வாகனம் எருமைக்கடா என்று தெரியும். நீராவி இயந்திரத்தைக் கண்டு பிடித்தவன் யார் என்று கேளுங்கள். தெரியாது; ஆனால் யமனுக்கு வாகனம் எருமைக்கடா என்பது மட்டும் தெரியும். ரேடியத்தின் உபயோகம் என்னவென்று கேளுங்கள். தெரியாது; ஆனால் யமனுக்கு வாகனம் என்ன என்று கேட்டால், உடனே எருமைக்கடா என்று பதில் வரும்......!" இந்த மாதிரி யமனையும் எருமைக் கடாவையும் வைத்துக் கொண்டு திரு அண்ணாத்துரை மேர்படி மகாநாட்டில் வெளுத்துக் கட்டிவிட்டார் என்று பிரசங்கத்தைக் கேட்ட நண்பர் சொன்னார். எழுத்தாளர் மகாநாட்டிலேயே திரு அண்ணாத்துரை பிரசங்கந்தான் விசேஷநிகழ்ச்சி என்றும் தெரிவித்தார்.

ஆனால், பேச்சும் பிரசங்கமும் சொற்பொழிவும் உடனுக்குடனே காற்றிலே போய் விடுகின்றன. கூட்டத்துக்கு வருகிற ஜனங்களில் 100க்கு 50 பேர் சொற்பொழிவைச் சரியாகக் கவனிப்பதேயில்லை; மற்ற ஐம்பது பேர் ஒரு காதினால் வாங்கி, இன்னொரு காதினால் விட்டுவிடுகிறார்கள்.

பேச்சைக் காட்டிலும் எழுத்து அதிக வலிமையுடையது. ஆனால் பேச்சு எழுத்து எதுவும் நாடகத்துக்கு அருகிலும் வராது. ஜன சமூகத்தை உண்மையில் சீர்திருத்த விரும்புவோன் கையாளவேண்டிய சாதனம் நாடகமேயாகும்.

நடிக்கக்கூடிய நாடகத்தை எழுதும் ஆற்றல் மிகவும் அரியது. அந்த ஆற்றல் திரு அண்ணாத்துரையிடம் பூரணமாக அமைந்திருக்கிறது என்பதை "ஓரிரவு" நாடகத்தில் கண்டு மகிழ்ந்தேன்.

• • •

"ஓரிரவு" நாடகம் ஓர் இரவில் நடக்கும் சம்பவங்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த ஓரிரவில், ஒரு ஜமீன்தாரன் வாழ்க்கைச் சம்பவங்கள் எல்லாம் பின் வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகின்றன.

அந்த ஜமீன்தாருக்கு ஒரு செல்வ மகள். அவளும் ஒரு டாக்டரும் பரஸ்பரம் காதலிக்கிறார்கள். ஆனால் ஜமீன்தார் ஒரு குடிகாரக் காலாடியின் கையில் சிக்கிக்

கொண்டு தவிக்கிறார். ஜமீன்தாருடைய பழைய வாழ்க்கையைச் சேர்ந்த பயங்கர இரகசியம் ஒன்று மேற்படி காலாடிக்குத் தெரிந்திருந்தது. அதைப் பயன்படுத்தி அந்தக் குடியன் ஜமீன்தாரின் மகளைத் தனக்கு மணம் செய்து கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறான்.

ஜமீன்தார் டாக்டரிடம் தன்னுடைய பழைய கதையைச் சொல்கிறார். அந்தக் கதை அரங்க மேடையில் காட்டப்படும் 'டெக்னிக்' மிக அற்புதம்.

அதே இரவில், திருடன் ஒருவன் ஜமீன்தார் வீட்டில் களவாடப் புகுந்துவிடுகிறான். இந்தக் கட்டத்தில் நாடகம் பார்ப்பவர்களுக்கு ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம் காத்திருக்கிறது.

நாடகத்தில் ஓரிடத்தில் விபசாரியின் வீடும், அந்த வீட்டுக்கு ஒரு அசடன் வரும் காட்சியும் காட்டப்படுகின்றன. இந்தக் கட்டம் அனாவசியம். இதைத் தவிர மற்றப்படி நாடகத்தில் எந்த இடத்திலும் விரசம் என்பது இல்லாமல் கதை விறுவிறுப்பாகச் செல்கிறது. "மேலே என்ன வருகிறது?" என்னும் ஆவலை ஒவ்வொரு நிமிஷமும் உண்டாக்கிக்கொண்டு செல்கிறது.


• • •

"ஓரிரவு" நாடகத்தை நடித்தவர்கள் ஸ்ரீ கே. ஆர். ராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபையினர். ஸ்ரீ கே. ஆர். ராமசாமி சிறந்த ரஸிகர்; அதோடு சிறந்த நடிகர்; அதைக் காட்டிலும் சிறந்த கனவான். "பூம்பாவை" நாடகத்தில் சம்பந்தராக நடித்ததிலிருந்து அவருக்குத் தமிழ் ஸினிமாக்களில் அதிகமான கிராக்கி.

எனவே ஸ்ரீ கே. ஆர். ராமசாமிக்கு இப்போது தம்முடைய நாடக சபையில் நடிக்க நேரமிருப்பதில்லை. எனினும் அவருடைய நாடக சபையில் பயிற்சி செய்யப்பட்டிருக்கும் நடிகர்கள் சிறந்த முறையில் நடிக்கிறார்கள். நாடக மேடை 'டெக்னிக்'கை நவீன முறையில் கையாண்டு பார்ப்பவர்களைத் திகைக்க அடிக்கிறார்கள்.

கதாநாயகியாக நடித்தவர் பெண்ணா, ஆணா என்பதைக் கடைசி வரையில் என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. யாராயிருந்தாலும், திருடன் வந்த கட்டத்தில் அவருடைய நடிப்பு பலே பேஷ்!

கிருஷ்ணன் நாடக சபை சிறந்து முன்னேறித் தமிழ் நாட்டுக்கு நல்ல தொண்டு செய்ய வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.



கம்பர் தரும் காட்சி

196. யாரோ துணைவன் வந்திருக்கிறான் !

போருக்கு அழைத்த சுக்ரீவன் மீது உண்டான வாலியின் அடங்காப் பெரும் கோபத்தைப் பார்த்தாள் அவன் மனைவியாகிய தாரை. முன் வந்து அவனை வெளியே போகாமல் விலக்குகிறாள்.

ஆயிடைத் தாரைஎன்(று)
அமிழ்தினில் தோன்றிய
வேயிடைத் தோளினாள்
இடைவிலக்கினாள் ;—

வாயிடைப் புகைவர
வாலி கண்வரும்
தீயிடைத் தன்நெடும்
கூந்தல் தீகின்றாள்.

[ஆயிடை: அந்தச் சமயத்தில்; தாரை என்(று) அமிழ்தினில் தோன்றிய வேயிடைத் தோளினாள்: பாற்கடலில் தேவாமிர்தத்தோடு ஒத்துப் பிறந்தாள் லக்ஷ்மி; லக்ஷ்மியின் அழகு வாய்ந்த வேய் போன்ற தோள்கொண்ட தாரை என்பவள்; இடை விலக்கினாள்: வாலியை முன்னே நின்று தடுத்தாள்; வாயிடைப் புகைவர: வாலியின் வாயிலிருந்து புகை வருவதுபோல் பெருமூச்சு வருகிறது. கண்ணிலிருந்து அக்கினிக் கனலை வருகிறது. அந்தக் கனலையில் தாரையின் நீண்ட கூந்தல் தீய்கிறதுபோலத் தோன்றுகிறது.]

* * *

தாரை தடுத்தாள். வாலி என்ன செய்கிறான்?

"விலக்காதே, விடுவிடு! போருக்குக் கூப்பிடுகிறானே, அவனுடைய மார்பை இதோ நொறுக்கி விடுகிறேன், பார்!" என்கிறான்.

டி.கே.சி.

விலக்கலை விடுவிடு
விளித்துளான் உரம்,—
கலக்கிக்க டல்கடைந்(து)
அமுது கண்டெனை,—
உலக்குவித்(து) உயிர்குடித்(து)
ஒல்லை மீள்குவல்
மலைக்குல மயில்!' என
மடந்தை கூறுவாள்.

[விளித்துளான் உரம்: போருக்கு அழைத்த சுக்கிரீவனுடைய நெஞ்சை; கலக்கிக் கடல் கடைந்து அமுது கண்டெனை: அந்தப் பாற்கடலை மலையினால் கலக்கிக் கடைந்து அமுதை எடுத்தேனே. அதே மாதிரி; உலக்குவித்து உயிர் குடித்து: நெஞ்சைச் சிதைத்து உயிரை உண்டு; ஒல்லை மீள்குவல்; சீக்கிரத்தில் திரும்பி வந்து விடுவேன்; மலைக்குல மயில்: மலையில் சஞ்சரிக்கும் உயர்ந்த ஜாதி மயிலை யொத்தவளே! என மடந்தை கூறுவாள்: என்று வாலி சொல்ல மறுபடியும் தாரை பேசுகிறாள்.]

* * *

தாரை சொல்லுகிறதைப் பார்ப்போம்.

"வீரம் எல்லாம் படைத்தவனே! உன்னுடைய தோள் வலிக்கு எதிர் நிற்க முடியாமல் ஓடிப் போய் விட்டான் உன் தம்பி. இப்பொழுது அவனுக்குப் புதிதாய் பலம் வந்து விட்டதா?—இல்லைதான். பின் ஏன் மறுபடி போர் செய்ய வருகிறான்?"

'கொற்றவ நின்பெருங்
குவவுத் தோள்வலிக்(கு)
இற்றனன் முன்னைநாள்
ஈ(டு)இன்று ஏகுவான்,
பெற்றிலன் பெருந்திறல்,
பெயர்த்தும் போர்செயற்(கு)
உற்றது, நெடுந்துணை
உடைமை யால்' என்றாள்.

[கொற்றவ: வீரனே; தோள்வலிக்கு இற்றனன்: உன்னுடைய தோள்வலி காரணமாகத் தோற்று இளைத்துப் போனான்; ஈடு இன்று ஏகுவான்: எதிர்த்து நிற்க பலமில்லாமல் ஓடி விட்டான்; பெற்றிலன் பெருந் திறல்: பெரிய பலம் ஏதாகிலும் பெற்று விட்டானா?— இல்லை; பெயர்த்தும் போர் செயற்கு உற்றது: மறுபடியும் போர் செய்ய வந்து நிற்பது; நெடுந் துணை உடைமையால்: பெரிய துணை பலம் ஏற்பட்டதால்.]

தம்பி சுக்கிரீவனுக்குப் புதிதாய் பலம் ஏற்படக் காரணமில்லை. பெண்கள் மூலமாகக் கேட்ட விஷயத்தைத் தாரை தன் கணவனிடம் சொல்லுகிறாள். வெகு அழகான சுபாவம்!

அபிலாஷை

விதூஷகன்

1943-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் எனக்கும் ரங்குவிற்கும் ஒரே பாங்கில் வேலை கிடைத்தது. அதுவரையில் ஒன்றாக வளர்ந்து ஒன்றாகவே படித்து வந்த எங்களுக்கு இது மிகுந்த மகிழ்ச்சியையே கொடுத்தது. திருவல்லிக்கேணியில் இருவரும் சேர்ந்து ஓர் அறையை எடுத்துக் கொண்டு குடியிருந்தோம். அப்போது இருவரும் பிரம்மசாரிகள்!

வாழ்க்கை ஏணியில் ஒவ்வொரு படியிலும் சேர்ந்து அடி வைத்து முன்னேறி வந்த நாங்கள், எங்கள் கலியாண விஷயத்திலும் ஒரு திட்டம் போட்டிருந்தோம். அதாவது, இரண்டு பேரும் ஒரே சமயத்தில் விவாகம் செய்து கொள்ளுவதென்ற சிறிய அபிலாஷைதான்! ஆனால் பூர்த்தியாக வேண்டுமென்று இருவருமே கவலைப் பட்டோம்.

ரங்கு தன்னுடைய மாமாவின் பெண் சுருத்லையைப் பற்றி எத்தனையோ தடவை என்னிடம் பிரஸ்தாபித்திருக்கிறான். ஒரு சமயம் அவனுடைய தந்தை முகூர்த்தம் உள்பட எல்லாவற்றையும் நிச்சயம் செய்து கொண்டு ரங்குவிற்குக் கடிதம் போட்டிருந்தார். அந்தக் கடிதத்தை அவன் என்னிடம் காட்டி, என் அபிப்பிராயத்தைக் கேட்டான்.

"ரங்கண்ணா! உனக்கு வயசாகவில்லையா, என்ன? காலா காலத்தில் நடக்கவேண்டியதைச் செய்துகொண்டால் தானே அழகு?" என்று நானும் வற்புறுத்தினேன்.

"நீ மாத்திரம் என்ன? உனக்கும் எனக்கும் ஒரே வயசுதானேடா!" என்று திருப்பிக் கொண்டான் ரங்கு.

நானும் விடவில்லை; "எனக்கும் சுருத்லாவைப் போல ஒரு மாமா பெண் இருந்தால் இப்பொழுது பிசுக்காமல் செய்து கொள்ளுவேன்!" என்று வருத்தப்படுபவன் போல் பாசாங்கு செய்தேன்.

ரங்கு தீர்மானமான குரலில், "டேய்! உனக்கும் அதே மாதிரி ஒரு 'அட்லாஸ்' கிடைக்கிற வரைக்கும் நான் காத்திருக்கிறேனடா!" என்றான். அத்துடன் அவன் நிற்கவில்லை; அடுத்த நாளே தன் தகப்பனாருக்கு ஏதோ காரணத்தை எழுதி, கல்யாணத்தைத் தட்டிக் கழித்து விட்டான்!

இதற்குப் பிறகு ஒரு மாதமாயிற்று. ஒரு நாள் சாயந்திரம் ரங்கண்ணா எதிர் வீட்டு மாடியை உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டிருந்தான். சத்தம் செய்யாமல் நான் அவன் பின்னால் போய் நின்று கொண்டேன். எதிர் வீட்டு மாடியில் உள்ளே திரும்பிப் போய்க் கொண்டிருந்த ஒரு பெண்ணின் தலைப் பின்னல் மாத்திரம் எனக்குத் தெரிந்தது. லேசாகக் கனைத்தேன்; ரங்கண்ணா திடுக்கிட்டுத் திரும்பினான். "என்னடா விசேஷம் அங்கே?" என்று கண்ணைச் சிமிட்டினேன். அவன் தலை கவிழ்ந்தான்.

"டேய்! என்னடா வெட்கம்? இதெல்லாம் சர்வ சகஜம்!" என்று சொல்லி அவன் முதுகில் தட்டிக் கொடுத்தேன்.

ரங்குவின் கண்களில் ஒளி வீசியது. "யாரடா அவன்?" என்று அவனை விசாரித்தேன்.

அவன் உதட்டைப் பிதுக்கிவிட்டு, "யாருக்குத் தெரியும்? இத்தனை நாளாக இங்கே இருக்கிறோமே, எப்போதாவது பார்த்ததுண்டா? யாரோ புதிதாக வந்திருக்காப்போல இருக்கு! நீ நன்றாய்ப் பார்த்தாயோ?" என்று மூச்சு விடாமல் பேசினான்.

நான் விளையாட்டாக, "முகத்தைப் பார்க்கவில்லை; தலைப் பின்னலையும் அதில் ஊஞ்சலாடிய ஒரு பந்து புஷ்பத்தையும் தான் பார்க்க முடிந்தது!" என்றேன்.

"அடாடா! த்ஸோ! த்ஸோ! முகத்தில்தான் என்ன லக்ஷ்மீகரம் தெரியுமா? அட்லாஸ் என்றால் அட்லாஸ்தாண்டா!" என்று ரங்கு வர்ணிக்கத் தொடங்கினான்.

நான் பேச்சை மாற்றி அவனை அழைத்துக்கொண்டு காப்பி சாப்பிடச் சென்றேன்.

போகும்போது என் மனம் ஏதோ போராட்டத்தில் இறங்கிவிட்டது. சுபாவமாக 'சளசள' வென்று பேசிக் கொண்டே போகும் நாங்கள் அன்று மௌனமாகவே சென்றோம். என் யோசனை யெல்லாம் இதுதான்: "எனக்காக ரங்கண்ணு தன் கலியாணத்தை ஒத்திப் போட்டு விட்டான். ஆனால் க்ஷண நேரத்தில் எதிர் வீட்டுப் பெண் அவன் மனதில் பெரிய புயலைக் கிளப்பி விட்டுவிட்டாளே! அவனுடைய உறுதி கடைசிவரை நீடிக்குமா?" என்பதுதான் அது.

★

மறுநாள் ஆபீஸிலிருந்து வந்ததும் பீச்சுக்குப் போகலாம் என்று ரங்குவைக் கூப்பிட்டேன். "தலையை வலிக்கிறதுடா!" என்று சாக்குச் சொல்லித் தட்டிக் கழித்தான் அவன். நானும் அவனை வற்புறுத்தவில்லை.

திருவல்லிக்கேணி கடற்கரை அன்று அலாதி சோபையுடன் காட்சியளித்தது எனக்கு! அதற்குக் காரண மில்லாமலு மில்லை. சுமார் நாற்பதைந்து வயது மதிக்கக்கூடிய ஒரு கனவானுடன் மயில் நடனம் ஆடிக் கொண்டு சென்று கொண்டிருந்த ஒரு தேவ கன்னிகையைச் சுற்றி வட்டமிட்டன என் கண்கள்! தன்னுடன் வருபவருடன் ஏதோ பேசிக் கொண்டு சென்ற அவள், இடை இடையே 'கலீர், கலீர்' என்று சிரித்தாள். காந்தக் கட்டையை நகர்த்தும் இடத்துக் கெல்லாம் இரும்புத் துண்டு செல்கிறதே, அப்படித்தான் இருந்தது அன்று என் நிலையும். அவள் உட்கார்ந்தாள்; நானும் உட்கார்ந்தேன்! அவள் எழுந்தாள்; நானும் எழுந்தேன்! அவள் நடந்தாள்; நானும் நடந்தேன்!

அன்றைய தினத்தி லிருந்து எது எப்படிப் போனாலும், தினம் தவறாது திருவல்லிக்கேணி கடற்கரையை முற்றுகையிட வேண்டியது என்று நான் சங்கல்பம் செய்து கொண்டேன். மறுநாள் ரங்கண்ணுவையும் என்னுடன் அழைத்துச் சென்று அந்த அப்ஸரஸைக் காண்பிக்க வேண்டும் என்று ஆசை. அதுவரை ஒரே படகில் பிரயாணம் செய்த ரங்குவும் நானும் காதல் துறையிலும் ஒரே சமயத்தில் அடி எடுத்து வைத்திருக்கிறோம் என்ற ஒற்றுமையை நினைத்து நான் ஆச்சரியப் படாமலில்லை.

அன்று நான் அறையில் நுழைந்தபோது, எதிர்பார்த்தது போலவே ரங்கு எதிர் வீட்டு மாடியை முற்றுகையிட்டுக் கொண்டிருந்தான். ஆனால் அவனுடைய முகத்தில் என்னவோ மகிழ்ச்சியைக் காணோம். நான் போனதிலிருந்து இரண்டு மணி சாவகாசமாக அங்கேயே உட்கார்ந்திருப்பதாகவும், 'அவள்' கண்ணில் தென்படவில்லை என்றும் அவன் சொன்னான்.

ரங்குவிடம் கடற்கரை சமாசாரத்தைப் பற்றிச் சொன்னேன். இரண்டு பேரும் சேர்ந்தாற்போல் காதல் துறையில் பிர



வெளித்திருப்பதையும் சுட்டிக் காட்ட நான் மறக்கவில்லை. கடைசியில் இருவரும் மறுநாள் கடற்கரைக்குச் சென்று, அந்த 'அப்ஸரா'வைப் பார்ப்பதென்று முடிவு செய்தோம்.

மறுநாள் இருவரும் கடற்கரைக்குச் சென்றோம். அதே கணவனுடன் குலுக்கு நடை போட்டுக் கொண்டு சென்ற ரதியைச் சுட்டிக் காட்டி, "ரங்கு! அதோ, அவள் தான் அந்த அப்ஸரஸ்!" என்றேன்.

ரங்குவின் முகம் திடீரென்று வெளுத்தது. "இவள்தான் எதிர்வீட்டில் நான் பார்த்த பெண்!" என்று தீயை மிதித்தவன்போல் கத்தி விட்டான் ரங்கு!

அவ்வளவுதான்; அன்றைய தினத்திலிருந்து ரங்குவும் நானும் ஒருவர் விஷயங்களில் மற்றவர் தலையிடுவதில்லை. ஆனால் அவன் இல்லாதபோது நானும், நான் இல்லாதபோது அவனும் எதிர்வீட்டு மாடியைக் கவனிப்பதை மட்டும் கைவிடவில்லை!

★

இதே நிலைமை ஒரு வாரம் நீடித்தது. அதன் பிறகு ஒரு நாள் வெளியே போய் விட்டுத் திரும்பி வந்தேன். அறையில் ரங்குவைக் காணோம். எதிர்வீட்டு மாடியிலிருந்து அவன் பேச்சுக் குரல் வந்தது!

"நீங்கள் முகூர்த்தத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுங்கோ! நான் ஊருக்குப் போய் எப்படியும் 'செட்டில்' பண்ணிக் கொண்டு வந்து சேருகிறேன்!" என்று ரங்கண்ணா உற்சாகமாகக் கத்தினான்.



"சாரதாவின் அதிர்ஷ்டம் தான் எல்லாம்! இவ்வளவு நல்ல இடமாகச் சுலபத்தில் முடிகிறது!" என்று அந்தக் கணவன் பெருமைப்பட்டுக் கொண்டார்.

இதையெல்லாம் காதில் வாங்கிக் கொண்ட எனக்கு என்னவோ போலிருந்தது. சிறிது நேரத்துக்குப் பிறகு எதிர் வீட்டிலிருந்து வந்தான் ரங்கு, ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்து ஏதோ எழுதினான். அதை எனக்கு எதிரில் போட்டு விட்டுக் கண்ணாடியின் முன்னால் போய் நின்று கொண்டு அவன் தன் தலையைச் சிங்காரித்துக் கொண்டான்.

அந்தத் துண்டுக் காகிதத்தில், "வெளியூர் போகிறேன்; சுப காரியமாகத்தான்! திரும்பி வர இரண்டு நாள் ஆகலாம்!" என்று எழுதியிருந்தது.

எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. 'கலியாண விஷயம் அப்புறம் பார்த்துச் சொல்லலாம்!' என்று அப்பாவுக்குக் கடிதம் எழுதிய ரங்கண்ணாவா இவன்? 'எல்லாம் நடிப்பு!' என்றது என் மனம்.

இரண்டு நாள் பொழுது ஓடியே போய் விட்டது. நான் எதிர் வீட்டு மாடிப் பக்கமே திரும்புவது கிடையாது. அவன்

தான் ரங்கண்ணாவிற்கு வாழ்க்கைப்படப் போகிறாளே!...ஆனால் மூன்றாவது நிமிஷமே அந்த உறுதி நீடித்திருக்கவில்லை. வைராக்கியத்தின் வரம்பைத் தாண்டி வாயு வேகத்தில் பாய்ந்து சென்றது மனவெழுச்சி! எதிர்வீட்டு மாடியைச் சுற்றி வட்டமிட்டன என் கண்கள்!

சிறிது நேரம் சென்றது. எதிர் வீட்டுக் கனவான் என்னைக் கூப்பிட்டார். ஒரு வேளை நான் மாடிப் பக்கம் கவனித்துக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டுத்தான் கண்டிப்பதற்காகக் கூப்பிடுகிறாரோ என்ற சந்தேகத்துடன் சென்றேன். அவர் என்னை என்னவெல்லாமோ கேட்டார். என் குடும்பத்தைப் பற்றிச் சவிஸ்தாரமாக விசாரித்தார். கடைசியில், "ரங்கு எப்போது திரும்பி வருவதாகச் சொன்னான்?" என்றும் கேட்டு வைத்தார்.

"இதைக் கேட்பதற்காகவா இத்தனை நேரம் பேச்சை வளர்த்தீர்கள்? அப்போதே கேட்டுத் தொலைத்திருக்கக் கூடாதா?" என்று மனதில் நினைத்துக் கொண்டு, "அவன் ஒன்றும் சொல்லவில்லை!" என்று எரிச்சலுடன் பதில் சொல்லிவிட்டு, என் அறைக்கு வந்து சேர்ந்தேன்.

மனதைக் குரங்கு என்று சொல்லுவது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது! இவ்வளவு நேரம் ரங்குவை விஷமாக எண்ணிய எனக்குத் திடீரென்று ஒரு ஞானோதயம் ஏற்பட்டது. ரங்கு என்ன இருந்தாலும் என் உயிர்த் தோழனல்லவா? எதிர் வீட்டுப் பெண்ணை அவன்தான் மணந்து கொள்ளட்டுமே! இதற்கு நான் என் மனதைப் புண் படுத்திக் கொள்ள வேண்டும்? நாங்கள் இருவரும் ஒரே சமயத்தில் மணம் செய்து கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் முறிந்து போகக் கூடாது. அவ்வளவுதானே? ரங்குவின் மாமா பெண் சகுந்தலாவை நான் ஏற்கெனவே பார்த்திருக்கிறேன். நல்ல அழகிதான்! இப்போதே மாம்பலத்தி லிருக்கும் அவர்கள் வீட்டுக்குப் போய் நடந்ததைச் சொல்லி, சகுந்தலையை எனக்கு நிச்சயம் செய்து கொண்டு வந்து விட்டால் என்ன?

அதற்குப் பிறகு நான் கொஞ்சமும் தாமதிக்கவில்லை. மாம்பலத்தை நோக்கி விரைந்தேன். ரங்குவின் தீர்மானத்தைக் கேள்விப்பட்டு அவன் மாமா கொஞ்சம் வருத்தப்படத்தான் செய்தார். சகுந்தலை கண்ணைக் கசக்கினாள். பிறகு என்னுடைய யோசனையைக் கேட்டதும் இருவர் முகமும் மலர்ந்தது. இரண்டு பேரும் சிரித்துக் கொண்டனர். மறு தினமே என் தகப்பனாருக்குக் கடிதம் எழுதி விடுவதாகச் சொல்லிவிட்டுத் திரும்பினேன். இப்போது மனதில் ஒரு திருப்தி! ரங்குவிற்கும் எனக்கும் சேர்ந்தாற்போல் கலியாணம் நடக்கப் போகிறதல்லவா?

★

என் அறைக்குத் திரும்பியபோது எனக்கு அங்கே ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. என் தகப்பனார், ரங்கு, எதிர் வீட்டுக் கனவான் மூவரும் உள்ளே பேசிக் கொண்டிருந்தனர். அப்பாவைக் கண்டதும் தூக்கிவாரிப் போட்டது எனக்கு. "எங்கேடா போயிருந்தே?" என்று அவர் கேட்டது அரை குறையாகத்தான் என் காதில் விழுந்தது.

பிறகு அவர்கள் என்னைக் கவனிக்காமல் தங்கள் பேச்சில் மூழ்கி விட்டனர். சிறிது நேரம் கழித்து என் தகப்பனாரும் எதிர் வீட்டுக் கனவானும் வெளியே புறப் பட்டுப் போயினர். ரங்கு என் எதிரில் வந்து உட்கார்ந்து கொண்டு, ஒரு துண்டுக் காகி தத்தை எடுத்தான் துப்பாக்கியை எடுத்த மாதிரி! அந்தக் காகிதத்தில் என்னவோ எழுதி என்னிடம் கொடுத்தான். "அடே, பழி! என் சகோதரி சாரதா உனக்கு வாழ்க்கைப்படப் போகிறாளடா! மனதைத் திடப்படுத்திக் கொள்!" என்று எழுதியிருந்தான் அதில்!

அதைப் பார்த்ததும் அறையில் உள்ள வஸ்துக்கள் அனைத்தும் என்னைச் சுற்றி வந்தன. ரங்கண்ணா தலைகீழாக நின்றான். இப்படி ஒரு பிரமை ஏற்பட்டது எனக்கு!

ரங்கண்ணா என் அருகே வந்தான். "உன்னிடம் நான் முன்பே சொல்லாதது பிசகு தான். அன்று எதிர் வீட்டுக் கனவானுடன் பேசிக் கொண்டிருந்தேனே? கடைசியில் பார்க்கப் போனால் அவர் என் சித்தப்பாவாகி விட்டார். ரங்கூனிலிருந்து சமீபத்தில்தான் இங்கு வந்திருக்கிறார். யுத்தத்திற்காக வெளியேறி விட்டவர்களில் இவரும் ஒருவர். சாரதா அவருடைய ஒரே பெண். அவள் எனக்குத் தங்கை முறை யாகிறாள் இல்லையா? அவளுக்கு இந்த வருஷமே கலியாணம் செய்து விட வேண்டுமென்றும் தகுந்த வரன் கிடைக்

காமல் சிரமப்படுவதாகவும் என்னிடம் தெரிவித்தார் அவர். சாரதாவிற்கு உன்னைக் காட்டிலும் சிறந்த வரன் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. உன்னைப் பற்றி அவரிடம் பிரஸ்தாபித்தேன். அவர் மகா அவசரக் குடுக்கை. உடனே உன் தகப்பனுரிடம் என்னை அனுப்பி நிச்சயம் செய்து கொண்டு அவரையும் அழைத்து வரச் சொல்லி விட்டார்!'' என்று ரங்கண்ணு மூச்சு விடாமல் செய்த பிரசங்கத்தை நானும் மூச்சு விடாமல் கேட்டுக் கொண்டிருந்தேன்!

"ரங்கண்ணு! அது கிடக்கட்டும்; சாரதா என்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்தாளாடா?'' என்று சிறிது லஜ்ஜையுடன் கேட்டேன்.

ரங்கு 'கடகட'வென்று சிரித்தான். "கரும்பு தின்னக் கூலி கேட்கும் அசட்டுப் பெண் அல்லடா அவள்! உன்னைக் கடற்கரையில் பார்த்ததிலிருந்து 'அன்னம் கண்டொரு மாத மூன்று!' என்று ஏங்குகிறாளடா அவள்!'' என்று அபிநயம் பிடித்தான் ரங்கண்ணு.

சகுந்தலையைப் பற்றி எனக்கு நினைவு வந்தது. "ரங்கண்ணு! உனக்குத் தெரியாமல் நான் ஒரு அசட்டுக் காரியம் செய்து விட்டேனடா! ஏதோ மனவெழுச்சியில் குடுகுடுவென்று உன் மாமாவிடம் போய் சகுந்தலையை எனக்கு நிச்சயம் செய்து கொண்டு வந்து விட்டேனடா!'' என்று தட்டுத் தடுமாறி அவனிடம் சொன்னேன்.

"டேய்! நீ எமகாதகனாக இருக்கிறாயே! இப்படி எல்லாரையும் நீ ஒருத்தனே கலியாணம் பண்ணிக்கிறதாக உத்தேசமா? வாடா, அப்பனே! மாம்பலத்துக்குப் போகலாம், புறப்படு! என் அம்மங்காளையாவது எனக்கு மிச்சம் வையடா!'' என்று என் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு சென்றான்.

ரங்குவைக் கண்டதும் அவன் மாமா சீறி விழுவார் என்று நான் பயந்தேன். ஆனால் அவர் சிரித்தார்! "என்னடா, ரங்கு! இப்படியா அந்தப் பிள்ளையாண்டானைத் திண்டாட்டத்தில் விடுவது?'' என்று கண்ணைச் சிமிட்டினார்.


தன்னுடைய திருவிளையாடலில் மாமாவிற்கும் அம்மங்காவிற்குங்கூட ஒரு 'சான்ஸ்' கொடுத்திருக்கிறான் ரங்கு என்று அப்போதுதான் எனக்குத் தெரிந்தது!

ராஜாஜி விழா

இரண்டு வருஷத்துக்கு முன்னும் ஸ்ரீரங்கத்துக் கோயில் யானை ராஜாஜிக்கு மலர் மாலையிட்டு வரவேற்பு அளித்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அதே ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் சென்ற நவம்பர் 16உ. ஹிஸ் எக்ஸெ-




லென்ஸி கவர்னர்-ஜெனரல் ராஜாஜியின் உருவப் படத் திறப்பு விழா ஸ்ரீரங்கம் ராஜாஜி கலைச் சங்கத்தாரால் சிறப்பாக நடத்தப்பட்டது. பேராசிரியர் ஸ்ரீ தோதாத்ரி ஐயங்கார் தலைமை வகித்தார். "கல்கி" ஆசிரியர் ராஜாஜியின் உருவப் படத்தைத் திறந்து வைத்தார். ஸ்ரீரங்கம்





மகா ஜனங்கள் "ராஜாஜிக்கு ஜே!" என்று ஆரவாரித்துத் தங்கள் குதூகலத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.



பால் பிளேடுகள்
உட்குழிவு கொண்டவை
நீடித்த நாட்களுக்கு
க்ஷவரம் செய்கின்றன
உட்குழிவுகொண்ட
பால் பிளேடு
வளைந்துகொடுக்கும் முனை
சாதாரண 'ரேஸர்'
பிளேடு
கடினமான முனை
பால் பிளேடுகள் வளைந்து கொடுக்கும்தன்மையுடையதால் அது ஒவ்வொரு ரோமத்தையும் ஒரே தடவையில் மேல் தோல் மட்டத்திற்கு மழுங்க க்ஷவரம் செய்து சருமத்திற்கு பட்டுப்போன்ற மிருதுத் தன்மை கொடுக்கிறது. ஆதலால் அதிகம் அழுத்தி க்ஷவரம் செய்ய வேண்டியதில்லை. பால் பிளேடுகள் நீடித்துழைக்கின்றன.
இரண்டு
முனையுடையது
அமெரிக்காவில்
கண்டு பிடிக்கப்
பட்டது
PAL
உட்குழிவடைந்து தீட்டப்பட்ட ரேஸர் பிளேடுகள்
எல்லா சாதாரண ரேஸர் பிடிக்களிலும் சரியாக பொருந்துகின்றன.
சோல் விநியோகஸ்தர்கள்: இந்தியன் கமர்ஷியல் கம்பெனி லிட.
45-47, அப்போலோ தெரு, போர்ட், பம்பாய்.
தென்னிந்தியாவுக்கு சோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்:
மெஸர்ஸ். பாரி & கம்பெனி, லிமிடெட்.
தபால் பெட்டி நெ. 12, மதராஸ் & கிளைகள்



இதுதான் வாழ்க்கை!

அம்மு

ரயிலில் ஒரே நெருக்கடி. ஜனங்களின் மேல் சாமான்களும், சாமான்களின் மேல் ஜனங்களுமாக அமளி துமளிப்பட்டது. நான், ஒரு வயது முதிர்ந்த கிழவியின் மடியில் உட்கார்ந்திருந்தேன்!

"சாமி! கொஞ்சம் தள்ளி உட்காருங்களேன்! கால் நோவுது!" என்றாள் அந்தக் கிழவி பரிதாபமாக.

"நான் என்ன செய்வேன், கிழவி! எங்கே இடம் இருக்கு. நீதான் பாரேன்!" என்றேன்.

"என்ன எழவு ரயிலோ, வரப் போகச் சோதக்குள்ளே உயிர் போயிடும் போலிருக்கு!" என்று கிழவி அலுத்துக் கொண்டாள்.

எனக்கும் அப்படித்தா னிருந்தது. ஆனால், ரயில் கூட்டத்தைக் கண்டு நான் அலுப்படையவோ, பயப்படவோ இல்லை. என் மனம் வெறுப்படையும்படியாய் இரு சம்பவங்கள நடந்துவிட்டதால், எதைக் கண்டாலும் எரிச்சலாகவும், ஆத்திரமாகவும் வந்தது எனக்கு.

அதோ, என் மனப்புண்ணைக் குத்துவது போல் பிச்சைக்காரன் பாடுகிறான். கேளுங்கள்!

"ஜகமதிலே காதல் ஒன்றே......!"

என்ற அடியைத் திருப்பித் திருப்பி அலை என் தலையில் அடிப்பதுபோல் பல சங்கதிகள் போட்டுக் காற்றிலே பறக்க விடுகிறான். அதைக் கேட்கும்பொழுது என் உடல், உள்ளம் இரண்டும் எப்படித் துடி துடிக்கிறது, தெரியுமா? "காதலாவது, கத்திரிக்காயாவது! வாயை மூடிக்கொண்டு போடா, பிச்சைக்காரப் பயலே!" என்று அவனுடைய கன்னத்தில் அறைவதைப் போல் தோன்றுகிறது!

என்ன காதல் வேண்டி யிருக்கிறது! அது என்ன ஒரே அக்காக ஆகாயத்தில்

தூக்கி, பிறகு 'தொப்' பென்று கீழே போட்டு விட்டதல்லவா?

இந்த நான்கு மாதங்களாக நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். சம்பந்தப் பட்டவர், சம்பந்தப் படாதவர் எல்லோரையுமே மனத்துக்குள் வைது கொண்டிருக்கிறேன்.

"காதலில் ஏமாற்றமடைந்த உனக்கு, இன்னும் கலியாண மாகவில்லையா?" என்று கேட்கிறீர்கள்; காதில் விழுகிறது. ஆகிவிட்டது, ஸார்! மனைவி என்று வந்திருப்பவள் மூக்கும் முழியுமாய், பதவிசாய் இருப்பதாக என் பெரியோர்கள் பெருமையாகப் பேசிக் கொள்கிறார்கள். பிறரும் அப்படியே சொல்கின்றனர். என் கண்ணுக்கும் விகாரமாய்ப் படவில்லை. ஆனால், என் உள்ளம் என்று ஒன்று இருக்கிறதே, அதுதான் அவளை 'அழகி' என்று ஒத்துக்கொள்ள மறுக்கிறது!

இதோ, என் கை என்னையும் அறியாமல் என் ஜேபியை நாடுகிறது. அதிலிருக்கும் கவரை எடுக்கிறேன். மேலே கொட்டை எழுத்தில் 'பானுமதி' என்று எழுதியிருக்கிறது. அந்தப் பெயரைப் பார்த்ததும் ஒரு தந்தப்பதுமையின் பிம்பம் என் கண் முன்னே வந்து நிற்கிறது. ஆஹா! அவ்வழகி, இன்று எங்கிருந்தோ வந்த ஒருவனின் மனைவி! நான் அவர்களுக்குத் தபால் கொண்டு போகிறேன். என்ன அநியாய உலகம் பாருங்கள்!

'பானுமதி' என்ற பெயரைப் பார்த்ததும் என் உடல் சோர்ந்து விடுகிறது. கண்ணை மூடிக்கொண்டு பலகையில் சாய்கிறேன். பழைய ஏடுகள் திரும்புகின்றன.

• • •

சொர்க்கத்திலிருந்து நரகத்துக்குத் திரும்புபவன் போல் அசாத்திய வெறுப்புடன் சென்னையிலிருந்து என் பாட்டியின் கிராமத்துக்கு வந்து சேர்ந்தேன். தம்முடைய பெண்ணின் கல்யாணத்துக்கு, 'அவசியம் வரவேண்டும், அவசியம் வரவேண்டும்' என்று சொல்லியே வந்து என் பிராணனை வாங்கிய சின்ன மாமாவிடம் எனக்கு அசாத்திய கோபம் வந்தது. அதற்குத் தகுந்தாற்போல் என் பெற்றோர்களும் மாமாவின் ஆசையைக் கெடுக்காமல் வரவேண்டுமென்று கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தனர். அதனால் பிடிக்கிறதோ பிடிக்கவில்லையோ, கிராமத்துக்கு வந்து தொலைந்தேன்.

"வாப்பா, சந்தானம்! 'பட்டிக் காட்டுக்குப் போவதா?' என்று பேசாமலிருந்து விடுவாயோ என்று பயந்து கொண்டிருந்தேன். நல்ல வேளை, வந்தாயே!" என்றார் மாமா.

எனக்கு எரிச்சலாயிருந்தாலும் மரியாதைக்காக, "நீங்கள் கூப்பிட்டு நான் வராமலிருந்து விடுவேனா, மாமா!" என்று புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டேன்.

"மாமாவுக்கு நீ வந்ததில் ரொம்பப் பெருமை" என்று தன் அண்ணாவின் வாத்ஸல்யத்தைச் சொல்லிப்



பெருமைப் பட்டுக் கொண்டாள் அம்மா.

“அதுதான் அவர் முகத்திலேயே தெரிகிறதே......!” என்றேன் சிரித்துக் கொண்டே.

“பெரியவரைப் பரிகாசம் பண்ணாதே!— ஆமாம், எத்தனை நாளைக்கு லீவு எடுத்துக் கொண்டு வந்திருக்கிறாய்?” என்று அம்மா விசாரித்தாள்.

“ஒரே நாள்! நாளை ராத்திரியே பறந்து போய் விடுவேன்!” என்று ஜம்பமாகக் கூறினேன்.

அம்மா முகத்தைக் கடுக்காயாக வைத்துக் கொண்டு, “ஏண்டா, இப்படி! வந்தது தான் வந்தே, நாலு நாள் இருந்துவிட்டுப் போகப்படாதோ?” என்றாள்.

“நாலு நாளும் பத்து நாளும் இருக்க, எனக்கு இங்கே பொழுது போக வேண்டாமா, அம்மா! இந்த ‘டெர்டி ப்ளே’ஸிலே என்ன இருக்கு!” என்றேன்.

“நாங்களெல்லாம் மனுஷதான் இல்லையாக்கும்!” என்று முணுமுணுத்துக் கொண்டே அம்மா போய்விட்டாள்.

ஒரு வழியாகச் சாப்பாடெல்லாம் முடிந்த பிறகு, கிராம வீடுகளுக்கே உரியதான தெருத் திண்ணையில் நான் படுத்துக் கொண்டேன். மறுபடியும் விழித்து எழுந்தபொழுது மணி நாலு இருக்கும். கண்களைக் கசக்கிக் கொண்டு சுவரில் சாய்ந்தவாறு உட்கார்ந்திருந்தேன். உள்ளே ஒரே கோலாகலமாயிருந்தது. யாரோ வெளியிலிருந்து புதிதாய் வந்திருக்கிறார்கள் போலிருக்கிறது. வரவேற்பும், சிரிப்பும் என் காதைச் செவிடு படுத்தின. இப்படி அமர்க்களப்படும்படியாக யார் வந்திருக்கிறார்களென்று யோசித்துக் கொண்டிருக்கும்பொழுது, அம்மா எனக்கு ‘டிபன்’ கொண்டு வந்தாள். நான் கேட்காமலேயே, “எங்க பெரியண்ணா வந்திருக்கார்!” என்றாள்.



அம்மாவுக்குத் தன் சகோதரர்களைப் பற்றிய பெருமை அசாத்யம். “ஏன், எங்க பெரிய மாமா இல்லையா!” என்றேன் சிரித்துக்கொண்டே.

“யார் இல்லையென்றார்கள்? உன்னைப் பார்த்தால் விடமாட்டார்! உள்ளே வா!” என்று அழைத்தாள்.

“இருக்கட்டும், இதைச் சாப்பிட்டு விட்டு வரேன்!” என்று கூறி, ‘டிபனை’ச் சாப்பிடத் தொடங்கினேன். சாப்பிட்டு முடிந்ததும் காற்றாட வெளியே போய் விட்டு வர வேண்டும்போல் தோன்றியது. உள்ளே சென்றால் வளவள வென்று பேச ஆரம்பித்து விடுவார்கள். ஆதலால், நான் மெதுவாக வெளியே கிளம்பிவிட்டேன்.

கொஞ்ச தூரம் சென்றிருப்பேன். இரண்டு வால்கள் என் பின்னோடு வந்து கொண்டிருந்தன. “டேய்! இவர்தான் கலியாண மாப்பிள்ளை என்கிறேன்! நீ என்ன சொல்றே?” என்றான் அழுத்தமாக ஒரு மேதாவி.

“சே, மண்டு! இவர் ஒன்னும் மாப்பிள்ளை இல்லை!” என்றான் இன்னொருவன்.

“என்ன ‘பெட்’ கட்டறே! இவர்தான் மாப்பிள்ளை என்கிறேன் நான்!” என்றான் அந்த முதல் சமத்து.

பிறகு இருவருக்கும் என்ன தோன்றிற்றோ, “மாப்பிள்ளை! மாப்பிள்ளை! அணில் பிள்ளை! அணில் பிள்ளை!” என்று கூவிவிட்டு ஓட்டம் பிடித்தனர்.

“அட, குரங்குகளா!” என்று வாய் விட்டுச் சொல்லிக் கொண்டே திரும்பிப் பார்த்தேன். அதற்குள் எட்டாக அவர்கள் பறந்து விட்டனர்.

நானும் அந்தத் தெருவைத் தாண்டி வாய்க்கால் மதகடியில் வந்து நின்றேன். சுற்று முற்றும் பார்த்த எனக்குப் பாலைவனத்தில் நிற்பதுபோல் தோன்றியது. வாய்க்காலில் ஜலம் போகலாமா, வேண்

டாமா என்று யோசனை செய்து கொண்டே பார்த்து கொண்டிருந்தது. நான் கோட்டுப் பையில் வைத்திருந்த ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிக்க உட்கார்ந்தேன். நாலு வரி படித்திருப்பேனோ இல்லையோ, பாத்திரம் தேய்த்துக் கொண்டிருந்த பெண்கள் என்னை ஆசீர்வாதம் செய்ய ஆரம்பித்து விட்டனர்.

'குளிக்கலாமனு வீணைச் சின்னடிருக்கேன்.............!'' என்று ஆரம்பித்தாள் ஒருத்தி.

இன்னொருத்தி, 'யாரோ ஒரு கட்டேலே போறவன் மதிலே வந்து உட்கார்ந்துட்டானே!'' என்று முடித்தாள்!

அதற்குமேல் அங்கிருப்பது உசிதமல்லவென்று வீட்டிற்குப் புறப்பட்டேன். என்னைப் பார்த்த அம்மா, "என்னடா, சந்தானம்! சொல்லாமே, கொள்ளாமே எங்கேயோ போயிட்டே? மாமா வீடு பூரா உன்னை தேடினாரே!'' என்றாள்.

'போயிறது. ஊர பூரா தேடாமல ....!'' என்று உள்ளூற நினைத்துக் கொண்டு, 'காத்தாடப் போய்விட்டு வந்தேம்மா!'' என்றேன்.

அதற்குள் பெரிய மாமாவே வந்து விட்டார். "என்ன, சந்தானம்! நம்மையெல்லாம் நினைவிருக்கா?'' என்று ஆரம்பித்தார்.

"நினைவில்லாமே என்ன மாமா!'' என்று அசடும், சமத்தும் வழியக் கூறினேன்.

பிறகு நெடுநேரம் இருவரும் பேசிக் கொண்டிருந்தோம். பெரிய மாமா அடிக்கடி எங்கள் ஊருக்கெல்லாம் வரமாட்டார். வந்தால், இத்தனை நாளாகப் பேசாத விஷயங்களை யெல்லாம் கதை கதையாய்ப் பேசுவார். அவருடன் பேசுவது சுவாரஸ்யமான சினிமா படம் பார்ப்பது போல் இருக்கும்.

நான் அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும்பொழுது, "அப்பா! பெட்டி சாவி எங்கே என்று அம்மா கேட்கிறாள்!'' என்று கேட்டுக்கொண்டே ஒரு பெண்—பெண் என்ன, காவிய நடையில், 'பேசும் பொற் சித்திரம்' வந்தாள்.

கண்ணைக் கொட்டாமல் நான் அவளைப் பார்த்தேன். "சாவியா ......? இதோ இருக்கு!'' என்று மாமா தம் பையிலிருந்த சாவியை எடுத்துக் கொடுத்தார்.

பிறகு என்னைப் பார்த்து, "இவன் யார் தெரிகிறதா? நீ பார்த்து ஆறேழு வருஷமாகி விட்டது...!'' என்றார் சிரித்துக் கொண்டே.

பிறகு, "பானு! இது யார் தெரிகிறதா?'' என்றார் பெண்ணைப் பார்த்து.

அவள் என்னைப் பார்த்துக் கொண்டே, "தெரியாதாக்கும்! அத்தான்!'' என்றாள்.

அவள் சிரிப்பிலே 'பொல்லாத்தனம்' இருந்ததாக எனக்குப் பட்டது.

அவள் சாவியை எடுத்துக் கொண்டு போய்விட்டாள். மாமா மறுபடியும் தன் பேச்சை ஆரம்பித்தார். பேச்சு நடுவில், "நீ எத்தனை நாளைக்கு லீவு எடுத்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார்.

"நாளு? ஒரு வாரம்!'' என்று கூசாமல் கூறினேன்.

ஆமாம், என் 'பிளா'னை இப்பொழுது மாற்றிக் கொண்டு விட்டேன். பானுமதி—அதாவது, சூரிய சந்திர பிரகாசம் ஓரிடத்தில் குடியிருக்கிறதென்றால், அது பட்டிக்காடா யிருந்தாலென்ன, 'பாரடைஸ்'ஸா யிருந்தாலென்ன?

2

பிறகுதான் சின்ன மாமாவின் பெண்ணுக்குக் கலியாணம். பானுமதி விலையுயர்ந்த உடைகளை உடுத்து, பளபளவென்ற நகைகளைப் பூண்டு ஜகஜ்ஜோதியாய்க் காட்சி யளித்தாள். திருமணத்துக்காக உள்ளே போய் உட்கார்ந்து கொண்டேன். நல்ல வேளை, மக்குமாதிரி விழித்துக்கொண்டு உட்கார்ந்திராமல் பேச்சுத் துணைக்குப் பெரிய மாமா வந்தார். நான் பேசிக் கொண்டே கடைக்கண்ணை அங்குமிங்கும் பிரயோகித்தேன். பானுமதி என் மனதை அறிந்தவள் போல் அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருந்தாள். உண்மையில் கலியாண மாப்பிள்ளைகூட அவ்வளவு சந்தோஷமா யிருந்திருக்க மாட்டார்; நான் அவ்வளவு குஷியா யிருந்தேன்!

அவ்வளவுதான்; பானுமதியை நான் என் காதலியாக நினைத்து விட்டேன். உடனே மானஸீகமாக அவளுடன் ஆகாயத்தில் பறக்கத் தொடங்கினேன். 'டம்டம்' என்று மேளச் சத்தம் கேட்டதும்தான் என் நினைவு திரும்பியது. என் கண்கள் பானுவை நோக்கின. "இம்மாதிரி என்று உன் கழுத்தில் தாலியைக் கட்டி என்னுடையவளாக்கிக் கொள்ளப் போகிறேனோ!'' என்று மனதில் நினைத்துக் கொண்டேன்.

ஒரு வழியாகச் சாப்பாடு முடிந்தது, பின்ன தூக்கம் ஒன்று தூங்கி, மறுபடியும் டிபன் காப்பியைச் சாப்பிட்டு விட்டுத் தெருப் பக்கம் வந்தேன். இப்பொழுது எந்த வாண்டுகள் வேண்டுமானாலும் 'மாப்பிள்ளே, மாப்பிள்ளே' என்று என்னைக் கூப்பிடட்டும், எனக்கு லட்சியமில்லை. கோபமும் வராது! அம்மாமி சொல்லும் பின்ன வாய்க்குச் சர்க்கரை போடுவேன். ஆனால், நாம் எதிர்பார்க்கும்பொழுது எது சொல்கிறது? எல்லாம் கலியாணப் பந்தலில் விளையாடிக்கொண் டிருக்கிறார்கள்!

இவ்வாறு எண்ணிக் கொண்டே மதகடிக்குச் சென்றேன். அங்கே, என்ன ஆச்சரியம்! பானுமதி தன் தங்கையுடன் நின்று கொண்டிருந்தாள்.

"பானுமதி, எங்கே......இங்கே......?" என்றேன்.

அவளுடன் வந்திருந்த அவள் தங்கை, "மூஞ்சி அலம்பிக்க வந்தோம், அத்தான்!" என்றாள்.

"அதற்குத் தனியாகவா வருகிறது?"

"தனி என்ன? இன்னைக்கு நீங்கள் வருவீர்கள் என்பதுதான் எனக்குத் தெரியுமே!" என்றாள் அந்தச் சித்திராங்கி!

இதைக் கேட்டபொழுது எனக்கு எப்படி இருந்திருக்கும்; நீங்களே யோசித்துப் பாருங்கள்!

விளையாட்டுப்போல் நான் வந்து நான்கு நாட்களாகி விட்டன. ஊருக்குத் திரும்ப மனம் இல்லாவிட்டாலும் லீவு ஆகிவிட்டதே என்று கிளம்பினேன். பானுமதியைக் கலியாணம் செய்து கொள்ள எனக்கு இஷ்டம் என்பதை மாமாவிடம் சொல்வதா, அம்மாவிடம் சொல்வதா என்று யோசித்தேன். ஆனால், பாழும் சங்கோஜம் பேச விடவில்லை. சரி, ஊருக்குப் போய்க் கடிதம் எழுதிக் கேட்பது என்று கிளம்பினேன். சென்னைக்கு வந்து நாலு நாள் வரை எழுதத் தயங்கி, பிறகு வெட்கத்தை ஒரு பக்கமாக மூட்டை கட்டி வைத்துவிட்டு, மாமாவுக்கு எழுதினேன்.

மாமா உடனே வருத்தத்துடன் பதில் எழுதி விட்டார். எனக்குப் பானுமதியைக் கொடுப்பதில் ரொம்ப ஆவலாம் அவருக்கு. ஆனால், பாழும் ஜாதகம் ஒத்துக் கொள்ளவில்லையாம். ஆதலால், வேறு இடம் பார்த்து நிச்சயம் செய்து விட்டாராம்!

அந்தக் கடிதத்தைப் பார்த்து உண்மையிலேயே நான் கண்ணீர் விட்டேன்.

பிறகு, எல்லோரையும் வையத் தொடங்கினேன். "எப்பொழுது காதல் என்று ஏற்பட்டு விடுகிறதோ, அப்பொழுது ஜாதகம் என்ன, மண்ணாங்கட்டி என்ன? இந்த மாமாவுக்கு மூளை இருந்தால்தானே! மண்டை மாத்திரம் பனங்காய் மாதிரி!" என்று திட்டினேன்.

இந்தச் சமயம் அப்பாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. மாமாவுடைய பெண்ணின் கலியாணத்துக்கு வந்திருந்த பெரிய மனிதர் ஒருவருக்கு, என்னை மாப்பிள்ளையாக அடைய ஆவலாயிருக்கிறதாம். சீர் வகைகள் இஷ்டப்போல் செய்கிறார்களாம். பெண் ரொம்ப லட்சணமாம். உடனே புறப்பட்டு வந்து சேர் என்று அவர் எழுதியிருந்தார்.

முதலில், 'இனிமேல் கலியாணம் எதற்கு?' என்று தோன்றியது. பிறகு, 'அவ்வளவு திடமாக—உறுதியாக எத்தனை நாளைக்கு இருக்க முடியும்?' என்ற பலவீனம் எழுந்தது. உடனே லீவு போட்டு விட்டு ஊருக்குக் கிளம்பி விட்டேன்.

கலியாணம் விமரிசையாக நடந்தது. அதே தேதியில் பானுமதிக்கும் கலியாணமானதால் அவளும் அவள் பெற்றோர்களும் வரவில்லை.

பல மாதங்கள் சென்று விட்டன. அதற்குப் பிறகு நான் பானுமதியைப் பார்க்கவேயில்லை. என் மனைவியும் வந்து சேர்ந்தாள். எனக்கு இருந்த ஆத்திரத்தையெல்லாம் அவளிடம் காண்பித்தேன். நின்றால் குற்றம், நடந்தால் குற்றம் என்று காய்ந்தேன். என்னையும், பானுவையும் அவள்தான் பிரித்து வைத்து விட்டதுபோல் என் உள்ளம் உறுமியது. இது சரியோ தவறோ, என் மனக்குரங்கு பிடித்த பிடி இப்படி......!

இந்த நிலையில் ஒருநாள் வேலை நிமித்தமாக நான் செங்கற்பட்டுக்குப் போகப் போகிறேன் என்று தெரிந்ததும், அடுத்த தெருவிலிருந்த தம் மைத்துனர் வீட்டுக்கு வந்திருந்த மாமா ஓடி வந்து, பானுமதிக்காக என் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டுச் சென்றார். நான் அதை எடுத்துக் கொண்டுதான் இப்பொழுது பிரயாணம் செய்து கொண்டிருக்கிறேன்.

• • •

கண்ணை மூடிக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்த நான் விழித்து கண்களைத் திறந்தேன். "இப்பொழுது பானு எப்படி இருப்பாள்?" என்ற கேள்வி எழுந்தது.

"பாவம், காதல் மணம் நடைபெறாததால் அவள் கருகி உருகி இளைத்திருப்பாள்!" என்ற அனுதாபமான விடை கிடைத்தது.

"பானுமதி! உன் மனம் என்ன பாடு பட்டுக் கொண்டிருக்கும்! என்னைப் பார்த்ததும் 'ஓ' வென்று அழுது விடுவாயோ என்னவோ......!" என்றெல்லாம் யோசித்த எனக்கு உண்மையில் அழுகை வந்து விட்டது. பக்கத்தில் இருப்பவர்கள் ஏதாவது நினைத்துக் கொள்ளப் போகிறார்களே என்று, கைக்குட்டையை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

3

ஒருவாறு ரயில் பிரயாணம் முடிந்தது. சோர்வடைந்து இறங்கினேன். பை நிறையப் பழங்களை வாங்கி நிரப்பிக்கொண்டு பானுமதியின் வீட்டை நோக்கி வண்டியில் புறப்பட்டேன்.

ஆயிற்று; வண்டி பானுவின் வீட்டெதிரில் வந்து நின்றது. பெரிய பாரத்தை இறக்குவதுபோல் என்னையே நான் இறக்கிக் கொண்டேன். வாசற் கதவு சாத்தியிருந்தது. கையில் பையுடன் படியேறிக் கதவை மெல்ல இடித்தேன். கதவு திறந்தது. என்ன ஆச்சரியம்! இளைத்துத் துரும்பாக இருப்பாள் என்று நான் எதிர்பார்த்த பானுமதியா இவள்! கண்களைத் துடைத்துக்கொண்டு பார்த்தேன். அதற்குள் பானுமதி ஒய்யாரமாகச் சிரித்துக் கொண்டே, "நான்தான் பானுமதி, அத்தான்! உள்ளே வாருங்கள், உள்ளே வாருங்கள்!" என்று கொம்மாளமாக வரவேற்றாள்.

பெரிதும் ஏமாற்றமடைந்த நான் உள்ளே போய் உட்கார்ந்தேன். எனக்குப் பேச்சே எழும்பவில்லை. அங்கு மிங்கும் படங்களைப் பார்ப்பதுபோல் பார்த்துக் கொண்டிருந்தேன். பானுவோ பம்பரம்போல் சுழன்றுகொண்டிருந்தாள். 'ஆதவனைக் கண்ட தாமரை' என்கிறார்களே, அந்த மாதிரி கணவனுடன் வாழ்க்கை நடத்தும் அவள் மலர்ந்து ஒளி வீசினாள். எனக்கு 'டிபன்' தயாரிப்பதில் ஈடுபட்டாள். நடுநடுவில் என்னிடம் வந்து பேசினாள். "உங்கள் கலியாணத்திற்கு வர வேண்டுமென்று எனக்கு ரொம்ப ஆசை அத்தான்!

ஆனால், என்ன செய்வது? அதே தேதியில் எனக்கும் கலியாணம்!'' என்றாள்.

இந்தப் பேச்சு என்னைத் தூக்கி வாரிப் போட்டது. என்னை மணந்து கொள்ளாத தில் துளிகூட வருத்தமில்லையா இவ ளுக்கு? எனக்கு அவளிடம் பேச வேண்டு மென்றுகூடத் தோன்றவில்லை. ஆனால் பானு விடாமல் பேசினாள். "அவர் இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் வந்து விடுவார். உங்களைப் பார்த்தால் ரொம்ப சந்தோஷப்படுவார்! அவருக்குப் பக்தர்கள் என்றால் ரொம்பப் பிரீதி!'' என்றாள்.

"ஐயே, வேண்டியிருக்கலையே இந்த ஸ்தோத்திரம்!'' என்று நான் என் மனத் துள் சொல்லிக் கொண்டேன். அதற்குள் அவள் டிபன் கொணர்ந்து வைத்தாள். ருசி தெரியாமல் ஏதோ தின்றேன். ஓயாமல் எல்லோரையும் பற்றி விசாரித் தாள். பிறகு 'அவர்' வரும் நேரமாகி விட்டதால் தன்னை அலங்காரம் செய்து கொள்ளப் போய்விட்டாள்.

நான் மேஜைமேல் கிடந்த புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிக்க முயன் றேன். ஆனால், புத்தகத்தில் மனம் செல் கிறதா? நம்மைச் சிறிதுகூட நினையாத ஒரு பெண்ணை நினைத்துக் கொண்டு, மகா சாதுவாய் வந்திருக்கும் அம்மாவின் மாட்டுப் பெண்ணைப் பழித்துக் கொண்டிருக்கிறோமே என்ற எண்ணம் நெஞ்சை வாள் கொண்டு அறுப்பதுபோலிருந்தது. பாவம் அவள்!

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் பானுவின் 'அவர்' வந்தார். வீணாய்ச் சொல்லக் கூடாது, பானுவுக்கு ஏற்றவர்தான்! கண் ணுக்குக் கனிசமாயும், கருத்துக்கு இனிய வராயுமிருந்தார். என்னிடம் அருமையாகப் பேசினார். அவரிடம் பானு நடந்து கொண்ட விதத்தைப் பார்த்தபொழுது, ஒருநாளும் அவள் என்னைக் காதலித் திருக்க மாட்டாள் என்றே எனக்குத் தோன்றியது. நான்தான் பைத்தியம்!

நான் அவர்களிடம் பேசி முடித்து விடை பெற்றுக் கொண்டபொழுது, "அத்தான்! எனக்கு உங்கள் அகமுடையாளைப் பார்க்க வேண்டும்போல் இருக்கிறது! அடுத்த தடவை வரும்பொழுது அவளையும் அழைத்துக் கொண்டு வர வேண்டும்!'' என்றாள் பானு.

நான் தலையை ஆட்டி விட்டு நடந்தேன். 'இதுதான் வாழ்க்கை!' என்று என் உள்ளத்திலிருந்து ஏதோ ஒன்று கூறியது!



காலக்ஷேபம்

விளம்பர விநோதம்

ஒருவர்:—என் மகன் மூன்று நாளாய் அகப் படவில்லை. அதைப்பற்றி உங்கள் பத்திரிகை யில் விளம்பரம் போட எவ்வளவு சார்ஜ்?

விளம்பர மானேஜர்:—அங்குலத்துக்கு மூன்று ரூபாய்!

அவர்:—ஐயோ, அவ்வளவா! அவன் ஐந்தடி உயரம் இருப்பானே!

★

பயமுறுத்தலா?

ஒருவர்:—ஒருவரிடமிருந்து பயமுறுத்திக் கடிதம் வந்தால் என்ன செய்வது?

போலீஸ் இன்ஸ்பெக்டர்:—அப்படி யாரிட மிருந்து தங்களுக்குக் கடிதம் வந்தது?

ஒருவர்:—என் வீட்டுக்காரரிடமிருந்துதான் வந்திருக்கிறது. 'வாடகைப் பாக்கியைக் கொடுக்கா விட்டால் வீட்டைக் காலி செய்து விடவேண்டும்' என்று பயமுறுத்திக் கடிதம் எழுதியிருக்கிறார்!

★

நல்ல காரியம்

"மோட்டார் விபத்தில் கை ஒடிந்து போய் விட்டதாகக் கேள்விப் பட்டேன். அது சம்பந்தமாக நீ தொடுத்த வழக்கு என்ன வாயிற்று?"

"ஐயாயிரம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுத் தார்கள்!"

"பணத்தைக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்?"

"நான் சொந்தத்தில் ஒரு மோட்டார் வாங்கப் போகிறேன்!"

★

யார் சமர்த்து?

அப்பா (குழந்தைகளிடம்):— அம்மா சொன்ன வார்த்தைகளை யெல்லாம் கேட்டுக் கொண்டு யார் சமர்த்தா இருந்தது?

ஒரு குழந்தை:—நீதான் அப்பா!

★

டாக்டரின் யோசனை!

அவர்:—நீ ஏன் ஹோட்டலிலிருந்து சாப்பாடு தருவித்துச் சாப்பிடுகிறாய்?

இவர்:—என் மனைவி சமைக்கக் கூடாது என்று டாக்டர் சொல்லியிருக்கிறார்.

அவர்:—ஐயோ, பாவம்! உன் மனைவிக்கு என்ன உடம்பு?

இவர்:—அவளுக்கு ஒன்றும் இல்லை; எனக் குத்தான் தீராத வயிற்று வலி!

கடிதமும் பதிலும்

சோமாஸ்

டாக்டர் ஸார்!

தாங்கள் அனுப்பிய 'பில்' வந்து சேர்ந்தது. அதைப் பார்த்ததும் மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்து விட்டேன். என் கையில் வந்த ஒரு சின்னச் சிரங்கை ஆற்றியதற்கு ரூ. 85—8—0 'பில்' அனுப்பியிருக்கிறீர்களே, அது என்ன கணக்கு? தயவு செய்து இந்தத் தொகைக்கு விவரமேனும் தெரிவிக்க வேண்டுகிறேன். சிரமத்துக்கு மன்னிக்கவும்.

தங்கள்,
சாரங்கன்.

ஐயா,

தங்கள் கடிதம், அதைப் படித்ததும் நான் மூர்ச்சைபோட்டு விழுந்து விட்டேன். என்னிடம் சிகிச்சை செய்து கொண்டவர்களில் 'பில்'லுக்கு விவரம் கேட்டு எழுதியவர் நீங்கள் ஒருவர்தான். நியாயத்துக்கு விரோதமாக ஒரு பைசாகூட உங்களிடம் வாங்க விரும்பவில்லை. நீங்கள் 'பில்'லில் கண்ட தொகை அதிகம் என்று எழுதி யிருப்பதைப் பார்க்கச் சிரிப்புத்தான் வருகிறது. விவரம் கீழே கொடுத்திருக்கிறேன். கவனித்துப் பாருங்கள்.

தங்கள்,

பானுராவ் (டாக்டர்)

மிஸ்டர் சாரங்கன்,

1. நான் தூங்கிக் கொண்டிருந்தபோது டெலிபோனில் கூப்பிட்டு எழுப்பியதற்கு ரூ. 1—0—0

2. தாங்கள் மிகவும் அவசரமான கேஸ் என்றும் உடனே வரவேண்டும் என்றும் சொன்னதால், வேறு மூன்று நோயாளிகள் வீட்டுக்குப் போகாம லிருந்ததில் 'விஸிட்' ஒன்றுக்கு ரூபாய் 5 வீதம் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 15—0—0

3. தங்களுடைய நோயைப் பற்றித் தாங்கள் சுமார் ஒரு மணி நேரம் சொல்லிக் கொண்டிருந்ததைப் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்ததற்கு ரூ. 5—0—0

4. தங்கள் சிரங்கை ஆபரேஷன் செய்ததற்கு ரூ. 10—0—0

5. தங்களுடைய பந்துக்கள் தங்களுக்கு வந்திருக்கும் நோய், 'ராஜபிளவையா, பிளேகா, நீரிழிவா, க்ஷயரோகமா?' என்று கேட்டு என் பிராணனை வாங்கியதற்கு ரூ. 5—0—0

6. தங்கள் பந்துக்கள் ஒவ்வொருவரும் தத்தமக்குற்ற வியாதியைப் பற்றி யோசனை கேட்டதற்கு ரூ. 12—0—0

7. உங்கள் பந்துக்களில் ஒருவர் தமக்கு ஜுரமா என்று பார்ப்பதற்காக எனது தர்மாமீட்டரை வாயில் வைத்துக் கடித்ததனால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு ரூ. 7—8—0

8. வரும்போது உங்கள் மனைவி என்ன ஆகாரம் கொடுக்கலாம் என்று யோசனை கேட்டதற்கு ரூ. 5—0—0

9. நான் காரில் ஏறப்போன சமயம் நீங்கள் உபாதையால் 'ஐயோ, ஐயோ!' என்று கத்த, உமது மனைவி மக்கள் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்து என்னை அழைத்துப் போனதற்கு ரூ. 2—0—0

10. உங்களுக்கும் மற்றவர்களுக்கும் தைரியம் சொன்ன வகையில் ரூ. 5—0—0

11. வீடு திரும்பும்போது மழையினால் எனக்கும் என் காருக்கும் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 5—0—0

12. வாரம் மூன்று தடவை உங்களை வந்து பார்த்துச் சென்றதற்கு ரூ. 6—0—0

13. உங்கள் புத்திரசிகாமணிகள் என்னுடைய காரைப் 'பஞ்சர்' செய்த வகையில் ரூ. 7—0—0

ஆக ரூ. 85—8—0

கடிதமும் 'பில்' விவரமும் எழுதியதனால் என் தொழில் வருமானத்துக்கு ஏற்பட்ட நஷ்டத்துக்கு ரூ. 15—0—0

ஆக ரூ. 100—8—0

குறிப்பு:—என் தர்மாமீட்டர் வாங்கின போது அதன் விலை ரூ. 7—8—0. அது அமெரிக்கன் தர்மாமீட்டர். இப்பொழுது அதன் விலை உயர்ந்து வருவதால் தாங்கள் 'பில்' பணம் கொடுக்கும் தினத்தன்று என்ன விலை விற்கிறதோ அந்த விலையைப் போட்டுக் கணக்கு முடிக்கப்படும்!

*கமலா:
புளபுளப்பான கூந்தல்
மாசுமறுவற்ற
வதனம் . . .

என்னே அவளது எழில்! அவள் பாண்ட்ஸ் உபயோகிக்கிறாள்!



உலகெங்குமே யுவநாரியர்களும் சிறுமியர்களும் ஒளிந்து கிடக்கும் தங்களுடைய எழிலை பகிரங்கமாக சோபிக்கச் செய்ய புது முறைகள் கண்டு பிடிக்கின்றனர்.

. . . சரும சௌந்தர்யமே இலக்ஷணமொத்த தேகாங்கங்களின் எழிலை எடுத்துக் காட்டுவது. பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமிலுள்ள இயற்கைத் தைலங்களின் உதவியால் சருமத்தை மிருதுவும், மழ மழப்புமாக வைத்துக் கொள்ளுங்கள்.

பாண்ட்ஸ் க்ரீம்ஸ்



பாண்ட்ஸ் கோல்ட் க்ரீம்: தினம் இரண்டு வேளை விரல் நுனிகளால் கோல்ட் க்ரீம் மெதுவாகத் தடவி, முகத்தை செம்மையாகச் சுத்தம் செய்யுங்கள். பாண்ட்ஸ் டிஷ்யூவால் துடைத்துக் களையவும்.

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்: பின்பு வானிஷிங் க்ரீம் தடவுங்கள். அது சருமத்திலுள் மறைகிறது - சருமத்திற்கு பாதுகாப்பளிக்கிறது.

பாண்ட்ஸ் பௌடர்: பின்னர் வேண்டுமானால் கொஞ்சம் பௌடரும் தடவிக் கொள்ளுங்கள். முகம் பூவிதழ்போன்ற மோகன காந்தியுடன் விளங்கும்.

வியாபார விவரங்களுக்கு:
எல். டி. ஸெய்மூர் & கோ. (இந்தியா) லிட்.
பம்பாய்-கல்கத்தா-காரச்சி-சென்னை.

ரோஜா மார்க் நெய்

"நல்ல மணவாக்குள்ள கிராமங்களில், வரத்தட்டு, பருத்திவிதைகளை ஏராளமாகக் கொடுத்து வளர்க்கப்பட்ட பசு, எருமைகளினின்றும் கிடைக்கும் புத்தப் புதிய வெண்ணெய்களைக் கொண்டு. சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது.

எல்லா ஊர் கோவாபரேடிவ் ஸ்டோர்களிலும 3 வி., 12 வி. டின்களில் கிடைக்கும். கோவையில் 14/86, ஒப்பணக்கார வீதியிலும், ஆர். எஸ். புரம ஸ்டோரிலும் கிடைக்கும்."

லிங்கம் & கோ., கோயமுத்தூர்

சுதந்திர இந்தியாவில் இனி பேராசை பிடித்தலையும் பேயர்களுக்கு இடமில்லை

★

எல்லோரும சுயராஜ்ய லாபம் அடையும்படி ஏற்பாடு செய்திருக்கிறது

50 காலணு பொட்டலம் 0-9-0
144 கொண்ட குரோஸ் 72-0-0


விற்பனையாளர் தேவை: மாதம் 60 முதல் 100 வரையில் சம்பளம்


★

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்:

மாணிக்க விலாஸ்

11, பீட் :: மதராஸ்-1


BINNY & Co (MADRAS) LTD
THE BANGALORE WOOLLEN COTTON AND SILK MILLS COMPANY LIMITED
BANGALORE
AGENTS SECRE
& TREASURERS


கார்
எதுவானாலும்
அதற்கு பொருத்தமானது
டன்லப்
TRADE MARK
டயர்
DK 298TM



நரி வளர்த்த நாய்

ராஜி

காட்டில் உள்ள மற்ற மிருகங்களைவிட, நரி மிகவும் பணக்கார நரியாக இருந்தது. அந்தக் காட்டில் பெரிய காட்டுப் பூனை ஒன்று, திருட்டுத் தொழிலை மிகவும் சாமர்த்தியமாகச் செய்து வந்தது. அந்தப் பூனையைப் பிடிப்பதற்குக் காட்டில் உள்ள போலீஸார் எவ்வளவோ சிரமப் பட்டும் பிடிக்க முடியவில்லை.

காட்டுப் பூனையைப் பற்றிக் கேள்விப் பட்டது முதல், எங்கே இரவில் தன் வீட்டிலும் புகுந்து விலை உயர்ந்த ஆபரணங்களை அது எடுத்துக் கொண்டு போய் விடுமோ என்று பணக்கார நரி பயந்தது. ஆகவே, அது ஒரு நாயை வளர்க்க வேண்டும் என்று தீர்மானித்தது.

“திருடர்களைப் பிடிப்பதற்குச் சாமர்த்தியமுள்ள ஒரு நாய் தேவை” என்று பல பத்திரிகைகளில் பணக்கார நரி விளம்பரம் செய்தது. மறுநாள் காலை பல நாய்கள் நரியின் வீட்டைத் தேடி வந்தன. எல்லா நாய்களையும்விட ஒரு புலி விற்பதற்காகக் கொண்டு வந்திருந்த நாய் தான் நரிக்கு மிகவும் பிடித்திருந்தது.

அந்த நாய் பார்ப்பதற்கே பயங்கரமாக இருந்தது. அதைப் பார்த்த மற்ற நாய்கள் ஓட ஆரம்பித்தன. அவிழ்த்து விட்டால் அது நரியையே கொன்று விடும்போல் தோன்றிற்று!



புலி கேட்ட பணத்தைக் கொடுத்து நரி அந்த நாயை வாங்கிக் கொண்டது. இரவு நேரங்களில் அது தன் விசாலமான பங்களாவுக்குள் நாயைத் தனியே அவிழ்த்து விட்டுவிடுவது வழக்கம். நாயும் இப்படியும் அப்படியுமாகப் பங்களாத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருக்கும். யாராவது நரியின் வீட்டுக்கு வந்தால் நாய் உரக்கக் குரைக்கும்; வந்தவர்களின் மீதும் ஒரே தாவாகத் தாவும். அதனால் நரியின் வீட்டுக்கு நாய் வாங்கியது முதல் ஒரு மிருகமும் வருவதில்லை!

நரி தன்னுடைய நாயின் திறமையை எண்ணி எண்ணி மிகவும் சந்தோஷப் பட்டது. “இனிமேல் நமக்குக் கவலையே இல்லை!” என்று அது தன் மனைவியிடமும் அடிக்கடி சொல்லிக் கொண்டது.


ஒரு நாள் இரவு ‘தடால்’ என்று ஏதோ சத்தம் கேட்டது. நரி திடுக்கிட்டுப் படுக்கையை விட்டு எழுந்து, சத்தம் வந்த இடத்துக்கு வந்து பார்த்தது. அங்கே கண்ட காட்சி நரியைத் தூக்கி வாரிப் போட்டது. உடனே அது “திருடன், திருடன்!” என்று பலமாகக் கத்திற்று.

நரி கத்தியதைக் கேட்ட நரியின் மனைவி, “நாயைக் கூப்பிடுங்களேன்!” என்று சொல்லிற்று.

‘நாயைக் கூப்பிடுவதா! ஜன்னல் வழியாக அடுத்த அறையில் என்ன நடக்கிற தென்று கொஞ்சம் பார்!”

என்று நரி சொல்லிற்று.

மனைவி நரி மெதுவாக எட்டிப் பார்த்தது. என்ன ஆச்சரியம்! பக்கத்து அறையிலிருந்த இரும்புப் பெட்டியைத் திறந்து, காட்டுப் பூனை விலை உயர்ந்த நகைகளை யெல்லாம் ஒவ்வொன்றாக எடுத்துத் தன் கைப் பெட்டியில் வைத்துக் கொண்டிருந்தது. காவலுக்காக வாங்கி வைத்திருந்த நாயோ அந்தத் திருட்டுக் காட்டுப் பூனையை அன்புடன் தன் நாக்கினால் நக்கிக் கொண்டிருந்தது!



அடுத்த ஐந்து நிமிஷத்திற்குள் நரியின் வீட்டுக்கு வந்து சேர்ந்த இன்ஸ்பெக்டர் காண்டாமிருகம், "எங்கே, அந்தப் பூனைத் திருடன்?" என்று கேட்டது.

நரிக்கும் அதன் மனைவிக்கும் அதனதன் கண்களையே நம்ப முடியவில்லை!

"இது என்ன கூத்து! இந்த நாயைத் திருட்டுப் பூனையைப் பிடிப்பதற்காக வாங்கினோமா, அதை அன்புடன் வரவேற்று நக்கிக் கொடுப்பதற்காக வாங்கினோமா?" என்றது நரியின் மனைவி.

"நாம் என்னத்தைக் கண்டோம்? இது உலகத்திலேயே இல்லாத அதிசயமாகவல்லவா இருக்கிறது! இப்படி எஜமானத் துரோகம் பண்ணும் நாயை இதுவரை நான் பார்த்ததே யில்லை!" என்றது நரி.

"இதுவரை பார்க்காவிட்டாலும் இப்பொழுதாவது பார்த்தீர்களோ, இல்லையோ! போகட்டும்; முதலில் அந்த நாயை இந்த வீட்டை விட்டு விரட்டுங்கள்!"

"நாயையாவது, முதலில் விரட்டுவாவது! அந்தத் திருட்டுக் காட்டுப் பூனையை யல்லவா முதலில் விரட்ட வேண்டும்?"

"அதற்குத்தான் இவ்வளவு நேரமாக இங்கேயே நின்று கொண்டு தவிக்கிறீர்களோ? தைரியத்தைப் பார், தைரியத்தை!" என்றது நரியின் மனைவி.

உடனே நரி விழுந்தடித்துக் கொண்டு ஓடி, அவசர அவசரமாகப் போலீஸ் ஸ்டேஷனுக்கு டெலிபோன் செய்தது.

"நீங்கள் இப்பொழுது வந்து என்ன பிரயோஜனம்? அந்தத் திருட்டுக் காட்டுப் பூனை நீங்கள் வருவதற்குள் என்னுடைய நகைகளை யெல்லாம் எடுத்துக் கொண்டு ஓடி விட்டதே! தான் ஓடினதுமல்லாமல் அது நான் அதிக விலை கொடுத்து வாங்கிய நாயையும் அல்லவா அழைத்துக் கொண்டு போய் விட்டது!" என்று பரிதாபமாகச் சொல்லிவிட்டு, நரி அழுவதற்குப் பதிலாக ஊளை விட்டது.

இன்ஸ்பெக்டர் காண்டாமிருகம், "நாயா! அதை எப்பொழுது வாங்கினீர்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டது.

நரி, "ஒரு புலியிடமிருந்து அந்த நாயை என் வீட்டைக் காப்பதற்காக வாங்கினேன்!" என்று சொல்லிற்று.

காண்டாமிருகம் 'கலீர்' என்று சிரித்து விட்டு, "என்ன நரியாரே! ஏமாந்து விட்டீர்களே! அந்த நாயை விற்க வந்தது உண்மையில் புலி அல்ல; புலியைப்போல் தோற்றமுள்ள திருட்டுக் காட்டுப் பூனைதான் அது. அந்த நாயைத் திருட்டுப் பூனை தனக்கு உபயோகமாயிருக்கும் பொருட்டே வளர்த்து வருகிறது. முதலில், அது உம்மைப் போன்ற பணக்காரர்களின் வீட்டில் அந்த நாயை விற்றுவிட்டு, பிறகு அதன் உதவியுடன் திருட வருகிறது! நாங்கள் வெகு நாட்களாக அந்தத் திருட்டுக் காட்டுப் பூனையையும் அது வளர்க்கும் நாயையும் பிடிக்க வேண்டும் என்று பெருமுயற்சி செய்து வருகிறோம்; முடியவில்லை!" என்றது.



இதைக்கேட்ட நரி மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்தது.



ரயில் வண்டியில்....

லக்ஷ்மி கிருஷ்ணசாமி

வண்டி ஹௌரா ஸ்டேஷனை விட்டு நகர்ந்ததும் நான் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டு, கூட இருந்த மற்றவர்களைக் கவனிக்கத் தொடங்கினேன். எனக்கு எதிர் 'ஸீட்'டில் உட்கார்ந்திருந்தவர் சற்று வயதானவராகக் காணப்பட்டார். அவருக்குப் பக்கத்தில் இரண்டு பெண்கள் உட்கார்ந்திருந்தனர். அவர்களில் சிறியவளுக்குப் பன்னிரண்டு வயதிருக்கும்; மற்றவளுக்குப் பதினாறு அல்லது பதினேழு இருக்கலாம். இவர்களைத் தவிர வேறு ஒரு வாலிபனும் இருந்தான். அவனைச் சரியாகக் கவனிக்க முடியவில்லை. வண்டி நகர்ந்ததும் அவன் எனக்கு மேலே உள்ள இடத்திற்குப் போய்விட்டான்.

பிரயாணம் செய்யத் தொடங்கி வெகு நேரமாகியும்கூட நாங்கள் ஒருவரையொருவர் அறிமுகப்படுத்திக் கொள்ள முயற்சிக்கவேயில்லை. சுபாவத்தில் கலகலப்பான எனக்கு வாயை மூடிக் கொண்டிருப்பது மிகவும் கஷ்டமாகத்தானிருந்தது. அவர்களுக்குச் சங்கோசம் போலிருக்கிறது, வழியில் தாமாகப் பேசுவோம் என்று பார்த்தால், அந்த இரண்டு பெண்களும் நான் இருந்த பக்கம்கூடத் திரும்பவில்லை. பெரியவரும் கண்ணை மூடிக் கொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்தார். பொதுவாக அவர்கள் மூவர் முகமும் சந்தோஷமாக இல்லை. என்ன வருத்தமோ, நாம் பேசினால் அசம்பாவிதமாக இருக்கப் போகிறதே என்று எனக்குப் பயமாக இருந்தது.

இரவில்கூட அவர்கள் தங்களுக்குள் அதிகம் பேசிக் கொள்ளாமல் ஆகாரத்தை முடித்துக் கொண்டு தூங்க ஆரம்பித்து விட்டனர். நானும் வேறு வழியின்றித் தூங்க முயற்சித்தேன்.

திடீரென்று யாரோ விம்மி அழுவதைப் போன்ற சத்தம் கேட்டது. விழித்துக் கொண்டேன். பெரிய பெண் புடவைத் தலைப்பால் முகத்தை மறைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தாள்; சின்னவள் அவள் கைகளை எடுத்த வண்ணம் அன்பும் பயமும் நிறைந்த குரலில், "அழாதே, அக்கா! யாராவது விழித்துக் கொள்ளப் போகிறார்கள்!" என்றாள்.

படுத்துக் கொண்டிருந்தபடியே இதைக் கவனித்துக் கொண்டிருந்த எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு சிறிய பெண்ணுக்கு என்ன துக்கம் இருக்கக் கூடும்? 'ஒருவேளை இந்தக் கிழவர் அவளுடைய கணவரோ!' என்று ஒரு எண்ணம் மின்னலைப்போல் தோன்றியது. மறு கணம் 'சேச்சே! அப்படி இருக்காது!' என்று சமாதானம் செய்து கொண்டேன்.

அப்போது சிறியவள், "நீ அழுதாயானால் நானும் அழுது விடுவேன்!" என்று பெரிய வளைப் பயமுறுத்தினாள்!

அதற்கு மேலும் என்னால் படுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. எழுந்திருந்து அவர்களைப் பார்த்து, "உங்கள் விஷயத்தில் தலையிடுவதைப் பற்றி என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு என்ன வருத்தம்? என்னிடம் சொல்லக் கூடுமா?" என்றேன்.

அவர்களிருவரும் திடுக்கிட்டு என்னை வியப்புடன் பார்த்தார்கள். நான் அன்புடன் பெரிய பெண்ணின் தோளின்மேல் கையை வைத்து, "நீ எதற்காக அழுகிறாய்? என்னை உன் சகோதரிபோல் நினைத்துக் கொண்டு விஷயத்தைச் சொல். வருத்தப் படாதே! இந்தப் பெரியவர் உங்களுக்கு என்ன வேண்டும்?" என்றேன்.

அதற்கு அந்தச் சின்னப் பெண், "அவர் எங்களுடைய தாத்தா!" என்று பதி லளித்தாள்.

ஒரு நிமிஷம் கழித்து மறுபடியும், "இந்த உலகத்தில் எங்களுக்குத் தாத்தாதான் தாயார் தகப்பனார் எல்லாம்! அதனால் தானோ என்னவோ, அவருக்கும் வரவர எங்களைக் கண்டால் பிடிக்கவில்லை!" என்றாள்.

அதற்குள் தன்னைச் சமாளித்துக் கொண்ட அவள் சகோதரி, "சீ, கமலா! அப் படிச் சொல்லாதே! நம்மிடம் எவ்வளவோ பிரியமாக இருக்கும் அவரைப்பற்றி அப்படிச் சொல்வது தவறு. எல்லாம் என்னுடைய போதாத காலம்!" என்றாள்.

கமலா அதை ஒத்துக் கொள்ளாதவள் போல் தலையை அசைத்து விட்டு என்னைப் பார்த்து, "பாருங்கள், மாமி! அவ்வளவு அன்புடையவர் என்றால் இவள் இஷ்டத் தைப் பற்றி ஏன் ஒரு வார்த்தைகூடக் கேட் காமல்..." என்று சொல்லிக் கொண்டிருக் கும்பொழுதே மற்றவள் இடை மறித்து, "பேசாமல் இரு, கமலா!" என்றாள்.

அவள் தங்கள் விஷயங்களை யெல்லாம் மூன்றாம் மனுஷியான என்னிடம் வெளி யிடத் தயங்குவதுபோல் தோன்றியது. நான் சிரித்துக் கொண்டே அவளைப் பார்த்து, "உன் பெயர் என்ன, அம்மா?" என்றேன்.

'சரோஜா' என்றாள். நான் விடாமல், "என் சரோஜா! நீ இஷ்டப்படாத இடத் தில் உன்னை மணம் செய்து கொடுக்க உன் தாத்தா முயற்சிக்கிறாரா?" என்றேன்.

கமலா படபடப்பாக, "இஷ்டமில்லாத இடமா? யாராவது ஐம்பது வயதான கிழவனை மணந்து கொள்ள முடியுமா?" என்றாள்.

நான் திடுக்கிட்டேன். என்ன! இவ் வளவு சின்னப் பெண்ணை அத்தனை வய தானவருக்கா கல்யாணம் செய்து கொடுப் பது? பார்த்தால் அப்படி யொன்றும் ஏழைகள் போல் தோன்றவில்லையே! கல் யாணம் செய்து கொள்ளுகிறவர் தான் கேட்டாலும் இவர்களுடைய தாத்தா எப்படி சம்மதித்தார்?

நான் அவர்களைப் பார்த்து மெதுவான குரலில், "உங்கள் தாத்தா ஏன் அப்படிச் செய்கிறார்?" என்றேன்.

சரோஜா மறுபடியும் கண்ணீர் பெருக்க ஆரம்பித்தாள். பிறகு என்னை நோக்கி, "வயதான அவரால் நாலு இடங்களில் அலைந்து எப்படி வரன் தேடமுடியும்? மேலும் பணக்காரரான அவருடைய சிநேகி தருக்குக் கொடுத்தால் நான் சௌக்கிய மாக இருப்பேன் என்கிற எண்ணமும் இருக்கும்!" என்றாள்.

நான் மனதுக்குள் அவள் குணத்தை வியந்து கொண்டே, "கல்யாணத்தை நிறுத்த முடியாதா? நான் நிச்சயித்தாய் விட்டதா?" என்றேன்.

"அவர் பம்பாயில் தன் சகோதரி வீட் டிற்கு வந்திருக்கிறாராம்; நாங்கள் அங்கே போனதும் முகூர்த்தம் வைத்து விடு வார்கள். கல்யாணத்தை நிறுத்த எனக்கு என்ன வழி தெரியும்? தற்கொலை செய்து கொள்ளக்கூட வழி தெரியாது!" என்று கூறும்போதே அவள் துக்கம் தாங்காமல் பலமாக விம்மி விட்டாள். என் கண்களை யும் கண்ணீர் மறைத்தது.

அதே நிமிஷம், "என்ன வார்த்தை சொல்லுகிறாய், சரோஜா!" என்று பெரிய குரலில் கேட்டபடியே, மேலே படுத்துக் கொண்டிருந்த அவளுடைய பாட்டனார் எழுந்திருந்து வந்தார். சரோஜாவின் முதுகை அவர் அன்புடன் தடவிக் கொண்டே, "எனக்கு மாத்திரம் உன்னை வயதானவருக்குக் கல்யாணம் செய்து கொடுக்க விருப்பம் என்று நினைத்துக் கொண்டாயா? அனாதரவான நிலையில் நம்மைக் கைகொடுத்துக் காப்பாற்றின வரின் வார்த்தையைத் தட்ட முடியாமல் சம்மதித்திருக்கிறேன்!" என்றார்.

நான் ஆவலுடன், “என்ன, உங்களைக் காப்பாற்றினாரா! அதென்ன விஷயம்?” என்றேன்.

கிழவர் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு சொல்ல ஆரம்பித்தார்:

2

பத்து வருஷங்களுக்கு முன்னால் என் பெண்ணும், மாப்பிள்ளையும் — அதாவது இவர்களுடைய பெற்றோர்கள் ரங்கூனில் இருந்தார்கள். நான் அவர்களைப் பார்ப்பதற்காக முதல் தடவையாகப் போயிருந்தேன். அங்கே சென்றபத்து நாட்களுக்கெல்லாம் திடீரென்று ஊரில் பரவிய விஷ ஜுரம் எங்களையும் பிடித்துக் கொண்டது. மற்றவர்





களைப் போலவே நாங்களும் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டோம். அங்கே இருந்த என் மாப்பிள்ளையின் நண்பரான ஒரு டாக்டர் எங்களை மிகவும் நன்றாகக் கவனித்தார். ஆனாலும் என்னைத் தனியே விட்டு விட்டு, அவர்களிருவரும் ஒரே வாரத்தில் போய்விட்டார்கள். அப்பொழுது சரோஜாவுக்கு ஏழு வயது; கமலாவுக்கு மூன்று வயது. முன்பின் தெரியாத ஊரில் இரண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டு நான் என்ன செய்ய முடியும்? எனக்கு யாரைத் தெரியும்? போதாக் குறைக்கு கடுமையான ஜுரமும், ஒரே சமயத்தில் இரண்டு பேரை இழந்த அதிர்ச்சியும் என்னை நடமாடக்கூட இயலாத நிலையில் கொண்டு வந்து விட்டிருந்தன. இம்மாதிரி சமயத்தில் அந்த டாக்டர்தான் எங்கள் மூவரையும் தம் வீட்டிலேயே வைத்துக் கொண்டு சிகிச்சையும், ஆதரவும் அளித்தார். ஒரு மாதத்துக்குப் பிறகு நாங்கள் ஊருக்குத் திரும்பும்போதும் வேண்டிய சௌகரியங்களெல்லாம் செய்து கொடுத்தார்.

அன்று அவர் உதவி செய்திருக்காவிட்டால் இன்று நாங்கள் என்ன நிலையில் இருப்போமோ?

இவ்வாறு பெரியவர் தம் கதையைச் சொல்லி முடித்ததும், “இந்தக் காலத்தில் அவ்வளவு தூரம் யார் பிரோபகாரம் செய்கிறார்கள்? ஆமாம், அவருக்குக் குழந்தைகள் ஏதாவது உண்டா?” என்றேன் நான்.

“ஒரே ஒரு பிள்ளை இருக்கிறான். அவன் ரங்கூனிலேயே படித்துக் கொண்டிருக்கிறான் போலிருக்கிறது. அவர் இந்தப் பக்கம் அதிகமாக வருகிறதில்லை; அப்படி வந்தாலும் நான் மாத்திரம்தான் வருகிறார். நாலைந்து வருஷங்களுக்கு முன்னால் அவருடைய மனைவி இறந்துவிட்டாள். அதற்குப் பிறகு இப்பொழுதுதான் வந்திருக்கிறார். வேலை செய்துவிட்டுக் களைத்து வீட்டுக்கு வந்தால் அக்கறையுடன் கவனிக்க வீட்டில் யாராவது வேண்டாமா? அதற்காகக் கல்யாணம் செய்து கொண்டு போகலாம் என்ற உத்தேசத்துடன் வந்திருக்கிறார் போலிருக்கிறது!” என்று கூறியபடி பெருமூச்சு விட்டார் பெரியவர்.

சரோஜா அவரைப் பார்த்து, “என் தாத்தா, முதலிலேயே என்னிடம் இதெல்லாம் சொல்லவில்லை? நான் ஏதோ உங்கள் நண்பர் என்று நினைத்துக் கொண்டிருந்தேன்! இவ்வளவு தூரம் உபகாரம் செய்தவர் என்று எனக்குத் தெரியவே தெரியாதே! சமயத்தில் உதவியவர்களுக்கு உயிரையே கொடுக்க வேண்டாமா? நீங்கள் கவலைப்படாதீர்கள், தாத்தா! நான் சந்தோஷமாக அவரைக் கல்யாணம் செய்து கொள்ளுகிறேன்!” என்றாள்.

நான் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தேன். அவன் முகத்தில் சற்று முன்னும் இருந்த வருத்தமும், துக்கமும் மறைந்து போய் சந்தோஷம் குடி கொண்டிருந்தது!

ஆனால் எனக்கு மாத்திரம் அது சரியாகத் தோன்றவில்லை. என்னதான் உதவி செய்திருந்தாலும் வயதானவர் சின்னப் பெண்ணை மணப்பது என்ற எண்ணத்தை என்னால் மாற்றிக்கொள்ள முடியவில்லை. கிழவர் சொன்ன வரலாற்றைக் கேட்கும் போது எனக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. ஆகவே அவரை நோக்கி, "அந்த டாக்டரின் பெயர் என்ன?" என்று கேட்டேன்.

"பாலகிருஷ்ணன்!"

அவ்வளவுதான்; "என்ன! நான் நினைத்தபடி என் மாமாவா!" என்று வியப்பு மேலிட்டினால் நான் கூவி விட்டேன்.

அதே சமயம் மேலே படுத்துக் கொண்டிருந்த வாலிபன், "யார்? ரங்கூனில் டாக்டர் பாலகிருஷ்ணனா! அப்படியானால் நீங்கள் இத்தனை நேரம் பேசிக் கொண்டிருந்தது என் தகப்பனாரைப் பற்றியா! அவரா கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார்? என்னால் நம்பவே முடியவில்லையே!" என்று ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டே கீழே இறங்கினான்.

அதுவரை வேறு ஒருவர் எங்களுடன் பிரயாணம் செய்வதையே மறந்து போயிருந்த நாங்கள், திடுக்கிட்டு அவனை நோக்கினோம்.

எனக்கு எல்லாமே ஆச்சரியமாகவும் ஒரே குழப்பமாகவு மிருந்தது. ரங்கூனிலிருந்து வந்திருக்கும் என் மாமாவைப் பார்ப்பதற்காகத்தான் நான் இப்பொழுது பம்பாய்க்குப் போகிறேன்; பெரியவரும் அவர் பேத்திகளும்கூட எங்கள் வீட்டுக்குத்தான் வந்து கொண்டிருக்கிறார்கள்!

எனக்கு விவரம் தெரிந்த பிறகு, நான் மாமா குடும்பத்தினர் ஒருவரையும் பார்த்ததில்லை. எப்போதுமே பலஹீனமான என் அம்மாமிக்குக் கப்பல் பிரயாணம் ஒத்துக்கொள்ளாது. அதனால் அங்கேயே இருந்த அவள் பெற்றோரிடம் விட்டுவிட்டு, என் மாமா மாத்திரம்தான் எங்கள் வீட்டுக்கு வருவார். அவர்களுக்கு ரகுராமன் என்று ஒரு பிள்ளை இருக்கிறான் என்று தெரியுமே தவிர, அவனைப் பார்த்திருக்கிறதாக எனக்கு நினைவே யில்லை!

ஆகவே, நான் கட்டுக்கடங்காத வியப்புடன் அவனைப் பார்த்து, "என்ன சொல்கிறீர்கள்! இன்றைக்கு நடக்கும் விஷயங்களெல்லாம் ஒன்றை ஒன்று தூக்கியடிக்கிறதே! உண்மையாகவே நீங்கள் என் அம்மான் சேய் ரகுராம்தானா?" என்றேன்.

"அட! உங்களுக்கு என் பெயர்கூடத் தெரிகிறதே! நான் இரண்டு மாதமாகக் கல்கத்தாவுக்குப் பக்கத்தில் வேலையாயிருக்கிறேன். சமீபத்தில் ரங்கூனிலிருந்து வந்த என் தந்தை, என் அத்தை வீட்டில் தன்னைச் சந்திக்கும்படி கடிதம் எழுதியிருந்தார். அதற்காகப் பம்பாய்க்குத்தான் நானும் போகிறேன். ஆனால் கடிதத்தில் அவருடைய கல்யாணத்தைப் பற்றி ஒன்



றுமே எழுதியிருக்கவில்லையே?" என்றான் அவன்.

அதற்குள் பொழுது விடிந்து வெகு நேரமாகியிருந்தது. பெரியவர் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்



டிருந்தார். நானும் மேஜுக்குப் பேச்சில் கலந்து கொண்டிருந்தாலும் உற்சாகமாக இருக்க முடியாதபடி ஏதோ ஒரு உணர்ச்சி என்னைக் கட்டுப்படுத்தி விட்டது. ரகுராமனுக்கும் அப்படித்தான் என்று அவன் முகபாவம் வெளிப்படுத்தியது.

3

பம்பாய்ஸ்டேஷனில் என் தகப்பனாரும் மாமாவும் எங்களை வரவேற்பதற்காக வந்திருந்தனர். எங்களைப் பார்த்ததும் மாமா சிரித்துக் கொண்டே, "அட! அலைய வைக்காமல் எல்லோரும் ஒரே இடத்தில் இருக்கிறீர்களே!" என்று கூறிவிட்டு, "ஆமாம், நீங்கள் ஒருவரை யொருவர் இன்னார் இன்னாரென்று தெரிந்து கொண்டீர்களோ?" என்றார்.

நாங்களும் சிரித்துக் கொண்டே, 'ஆயிற்று!' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினோம்.

பிறகு என்னைப் பார்த்து, "நீ இப்பொழுதுதானே ரகுராமனை முதன் முதலாகப் பார்க்கிறாய்? அவனை எப்படி அறிமுகப்படுத்திக் கொண்டாய் என்பதை எனக்கு விவரமாகச் சொல்ல வேண்டும், தெரிந்ததா?" என்று கேட்டுவிட்டு, தன் நண்பரிடம் குசலப்ரச்னம் செய்து கொண்டிருந்தார்.

வீட்டுக்குப் போகும்போது நான் அகஸ்மாத்தாகச் சரோஜாவைப் பார்த்தேன். அவள் ரகுராமனையே கவனித்துக் கொண்டிருந்ததைக் கண்டதும் எனக்கு மனதில் திக்கென்றது.

சாப்பாடெல்லாம் ஆனபிறகு நாங்களெல்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். மாமா சரோஜாவின் தாத்தாவைப் பார்த்து, "என்ன, நான் எழுதியிருந்தேனே, அந்த விஷயம் உங்களுக்குச் சம்மதந்தானே?" என்று கேட்டார்.

"பூரண சம்மதம்!" என்றார் பெரியவர்.


"சரோஜாவைக் கேட்டீர்களா? அவள் சம்மதந்தானே முக்கியம்?" என்று மாமா சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு, ரகுராமனைப் பார்த்து, "நீ என்ன சொல்லுகிறாய்? மூன்று நாட்களாக ஒருவரையொருவர் விடாமல் பார்த்துக்கொண்டே வந்திருக்கிறீர்களே! உனக்கும் இஷ்டம் தானே?" என்றார்.

நாங்களெல்லோரும் ஒன்றும் புரியாமல் அவரை நோக்கினோம். மாமா தம் நண்பரை நோக்கி, "நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். இறந்துபோன என் நண்பனின் ஞாபகமாகச் சரோஜாவை ரகுராமனுக்குக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்றுதான் நான் வந்திருக்கிறேன். நான் எப்பொழுதோ செய்த சிறிய உதவியை நினைவில் வைத்துக்கொண்டு நீங்கள் நான் எப்பொழுது வந்தாலும் மிகவும் பிரியத்தோடும் விஸ்வாசத்தோடும் நடந்து கொள்கிறீர்களல்லவா? அப்படிப்பட்டவர் நமக்காகத் தமக்கு இஷ்டமில்லாத விஷயத்தைக்கூடச் செய்வாரா என்று பார்க்க வேண்டுமென்று ஒரு அசட்டு ஆசை! ஆகையால்தான் அப்படி எழுதியிருந்தேன். உலகத்தில் உங்களைப்போல் இருப்பது அபூர்வம்தான்! பரதேசத்தில் இருந்தால் உறவினர்களைக் கூடப் பார்க்க முடிகிறதில்லை என்ற காரணத்தால் ரகுராமனை இங்கேயே வேலையில் அமர்த்தியிருக்கிறேன். என்ன சொல்கிறீர்கள்? முகூர்த்தம் வைத்துவிடலாம் அல்லவா?" என்றார்.

பெரியவர் சந்தோஷ மிகுதியால் ஒன்றும் பேச முடியாமல் 'சரி' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினார்.

நான் சரோஜாவை நோக்கினேன். அவளும் ரகுராமனும் ஒருவரை ஒருவர் கடைக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தனர்!

● ● ●



டாக்டர் :—நோய் ரொம்ப அதிகமாகி விட்டது. ஆபரேஷன் செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

நோயாளி :—ஆபரேஷனுக்கு என்ன சார்ஜ்?

டாக்டர் :—மூந்நூறு ரூபாய்!

நோயாளி :—ஐயோ! என்னிடம் அவ்வளவு பணம் இல்லையே!

டாக்டர் :—சரி, அப்படியானால் இந்த மாத்திரையை வாங்கிச் சாப்பிடும்; இதிலேயே குணமாகி விடும்!

● ● ●

சந்திர ஹாரம்

ஆசிரியர் .... மொழிபெயர்ப்பு
பிரேம்சந்த் .... ரா. வீழிநாதன்

[பூர்வ கதை: நகைப் பைத்தியம் பிடித்த பத்மா, வறட்டுக் கௌரவம் படைத்த ரமாநாத்தின் மனைவியாகிறாள். ரமாநாத்தின் தந்தையான தயாநாத பாபு, கல்யாண காலத்தில் தம்முடைய நிலைமைக்கும் மீறிக் கடன் வாங்கி, மாட்டுப் பெண்ணுக்கு வேண்டிய நகைகள் செய்து போடுகிறார். ஆனாலும் 'சந்திர ஹாரம்' இல்லாத குறை பெரிய குறையாக இருக்கிறது.

நாளுக்கு நாள் கடன்காரர்களுடைய 'கெடுபிடி' அதிகரிக்கவே, தயாநாத பாபுவும் அவருடைய மனைவி ஜாகேசுவரியும் என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கிறார்கள். நிலைமையை உணர்ந்த ரமாநாத்துக்கும் பத்மாவின் நகைகளைத் திருப்பிக் கடைக்காரர்களிடம் கொடுத்து விடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று தோன்றுகிறது. ஆனால், பத்மாவிடம் உண்மையைச் சொன்னால், தன் கௌரவத்துக்குப் பங்கம் வந்து விடுமென்று அவன் நினைக்கிறான். ஆகவே, ஒருநாள் இரவு பத்மாவின் நகைப் பெட்டியைத் திருடிக்கொண்டு வந்து, தன் தந்தையிடம் கொடுத்துக் கடனைத் தீர்த்து விடும்படிச் சொல்கிறான். அவரும் அப்படியே செய்கிறார்.

நகை திருட்டுப் போனது முதல் பத்மா ஒரே துயரத்தில் ஆழ்ந்து விடுகிறாள். அவளைத் திருப்தி செய்யும் பொருட்டுத் தான்தோன்றித் தனமாகத் திரிந்துகொண்டிருந்த ரமாநாத், தன்னுடைய சதுரங்கத் தோழர் ரமேஷ் பாபு மூலம் முனிஸிபாலிடி 'சுங்க' இலாகாவில் உத்தியோகம் பெறுகிறான். அந்த இலாகாவில் அவனுக்குச் சம்பளத்துடன் கிம்பளமும் கிடைக்கிறது. இம்மாதிரிக் கிம்பளம் கிடைத்தால் கடனை வெகு விரைவில் அடைத்து விடலாம் என்ற நம்பிக்கையுடன், அவன் பத்மாவுக்குச் சந்திரஹாரம், கங்கணம் முதலிய நகைகளைக் கடனாக வாங்கிப் போடுகிறான். ஆனால், அவன் நினைத்தபடி கடனை அடைக்க முடியவில்லை.

இதற்கு மத்தியில் வக்கீல் இந்துபூஷணின் மனைவியான ரத்தனுடைய தொடர்பு பத்மாவுக்குக் கிட்டுகிறது. பத்மாவின் கங்கணத்தைப் பார்த்த ரத்தன், தானும் அம்மாதிரி ஒரு கங்கணம் செய்து போட்டுக் கொள்ள வேண்டும் என்று நினைத்து, அதற்கான பணத்தை ரமாநாத்திடம் கொடுக்கிறாள். ரமாநாத் அந்தப் பணத்தைக் கொண்டு போய்க் கடைக்காரனிடம் கொடுத்து, கங்கணம் வேண்டுமென்று கேட்கிறான். அவன் பழைய பாக்கிக்காக அதை வரவு வைத்துக் கொண்டு, மேற்கொண்டு முன் பணம் கொடுத்தால்தான் கங்கணம் செய்து தர முடியும் என்று சொல்லி விடுகிறான். ரமாநாத் 'இதோ, அதோ!' என்று சாக்குப்போக்குகள் சொல்லி ரத்தனை வெகு நாட்கள் அலைக்கழித்து வருகிறான். ரத்தன் சலித்துப் போய்ப் பணத்தைத் திருப்பித் தருமாறு சொல்லி விடுகிறாள். வேறு வழியில்லாமல், ரமாநாத் ஆபீஸ் பணத்தைக் கையாண்டு விடுகிறான்!

இதனால் அவன் யாருக்கும் தெரியாமல் தன் சொந்த ஊரான அலகாபாத்தை விட்டு ஓடும்படி நேர்கிறது. அவனுக்குக் கல்கத்தாவிலிருந்த தேவிதீன் என்ற கிழவன், தஞ்சமளிக்கிறான்.

ஏற்கனவே உடல் நலிவுற்றிருந்த வக்கீல் இந்துபூஷணுக்கு எமனிடமிருந்து அழைப்பு வந்து விடுகிறது. ரத்தன் விதவையாகிறாள். வக்கீலுக்கு ஈமக் கிரியைகள் செய்யும் பொருட்டு வந்து சேர்ந்த அவருடைய அண்ணன் பிள்ளை மணிபூஷண், ரத்தனை ஏமாற்றிச் சொத்தை அபகரித்துக் கொள்ள நினைக்கிறான்.

ஒரு நாள் ரத்தனும் பத்மாவும் ரமாநாத்தைக் கண்டு பிடிப்பதற்காக ஒரு யோசனை செய்கிறார்கள். சதுரங்கப் படம் ஒன்றை வெளியிட்டு, அதற்குச் சரியான விடையை அனுப்புபவருக்கு ஐம்பது ரூபாய் வெகுமதி அளிப்பது என்பதுதான் அந்த யோசனை.]

முப்பத்துமூன்றாம் அத்தியாயம்

பிடிபட்டான்!

ரமாநாத் தேநீர்க் கடை ஒன்று வைத்து விட்டான். ஆனால் அது பகல் முழுவதும் மூடியிருக்கும்; இரவு வேளைகளில் மட்டும் தான் திறந்திருக்கும். அந்த வேளையில் கூடத் தேவிதீன்தான் பெட்டியடியில் அதிகமாக உட்கார்ந்திருப்பான். கடை வைத்த அன்றைய தினமே அவனுக்கு மூன்று நான்கு ரூபாய்களுக்கு வியாபாரம் நடந்தது. மறுநாள் முதல் நாலைந்து ரூபாய்க்குக் குறைவில்லாமல் வியாபாரம் நடக்கத்

தொடங்கி விட்டது. அவன் கடையில் ஒரு தடவை உ குடித்து ருசி கண்டவர்கள், வேறு கடைகளுக்குப் போவதில்லை. ரமாநாத் கையில் கொஞ்சம் பணம் சேர்ந்ததும் அழகிய மேஜையொன்று வாங்கிப் போட்டான். அதன்மீது இரண்டொரு சீட்டுக் கட்டுகளும் வாங்கி வைத்தான். இன்னும் கொஞ்ச நாட்கள் சென்றதும், இரண்டொரு தினப்பத்திரிகைகளும் வரவழைக்கலானான். கொஞ்ச நாட்களுக்குள் அவனுடைய கடைக்கு அந்தப் பிராந்தியத்திலேயே நல்ல பெயர் ஏற்பட்டு விட்டது. இரண்டு மூன்று மணி நேரத்து வியாபாரத்தில் அவனுக்கு எல்லாச் செலவும் போக நாலைந்து ரூபாய்கள் லாபம் கிடைக்கத் தொடங்கி விட்டது.

இந்த நான்கைந்து மாத காலமாகக் காய்ந்து கிடந்த ரமாநாத்துக்குக் 'குஷி'யாகப் பொழுதைப் போக்க வேண்டும் என்ற ஆசை வளரத் தொடங்கியது. கையில் காசு இல்லாமலிருந்தபொழுதுதான் கஷ்டமாயிருந்தது; மனதை அடக்கியாள வேண்டியிருந்தது. கையில் நாலு காசு ஏறியதும், அவனுக்கு 'ஸைர் சுற்ற வேண்டும், ஸினிமா பார்க்க வேண்டும்' என்ற ஆசை எழுவது சகஜம்தானே!

கையில் காசு இல்லாத தோஷம்! இவ்வளவு நாட்கள் அவன் பற்பசை, பிரஷ், ஸ்நோ, முகப் பவுடர், சீப்பு, கண்ணாடி முதலியவை இல்லாமல் காலம் கழித்து வந்தான். இப்பொழுது அந்த மாதிரியான சாமான்கள் ஒவ்வொன்றாக அவனுடைய அறையை அலங்கரிக்கத் தொடங்கின. ஒருநாள் அவன் தேவீதினுக்காக ஒரு நல்ல கம்பளிப் போர்வை வாங்கி வந்தான். கிழவிக்கு அடிக்கடி தலைவலி ஏற்படுவது உண்டு. அதைப் போக்குவதற்காக அவன் ஏதேதோ தைலங்கள் அவளுக்கு வாங்கிக் கொடுத்தான். ரமாநாத், தங்கள் மீது காட்டும் அளவற்ற பற்றுதலைக் கண்டதும் கிழவிக்கும், அவள் கணவன் தேவீதினுக்கும் பரம சந்தோஷம் உண்டாயிற்று.

இப்பொழுதெல்லாம் கிழவி தன் தலையிலேயே காய் கறிக் கூடையைத் தூக்கி வருவதைப் பார்த்துவிட்டால், ரமாநாத் அவளை மிகவும் கடிந்து கொள்ளுவான். 'என் அம்மா, நான்தான் நாலு காசு சம்பாதிக்க ஆரம்பித்து விட்டேனே, இல்லையோ? இன்னமும் நீ எதற்காக இப்படி உயிரை விடுகிறாய்? இன்னொரு தடவை உன் தலையில் காய்கறிக் கூடையைப் பார்த்து விட்டால், உன் கடையையே தூக்கி நான் வாசலில் எறிந்து விடுவேன். ஜாக்கிரதை! அப்புறம் நீ என்ன திட்டினாலும் எனக்கு அக்கறையில்லை' என்பான். கிழவி ரமாநாத்தின் பயமுறுத்தலைக் கேட்டு உள்ளூற மனம் பூரிப்பாள். சந்தையிலிருந்து காய் கறி வாங்கி வந்தால், நான்கைந்து வீடுகளுக்கு அப்பாலேயே கூடையை இறக்கி வைத்துவிட்டு, ஓசைப்



படாமல் வந்து, 'ரமாநாத் திண்ணையில் இருக்கிறானா, இல்லையா?' என்று பார்த்துக் கொள்ளுவாள். அவன் இருந்து விட்டால் ஒரு கூலியாளுக்குக் காலணா அணாயணா கொடுத்துத் தூக்கி வரச் செய்வாள். அவன் அங்கே இல்லாம லிருந்தால் அவசர அவசரமாகப் போய் அந்தக் கூடையைத் தூக்கி வந்து கடையில் வைத்துவிட்டு, ஒன்றுமே அறியாதவள் போல் பேசாமல் உட்கார்ந்து விடுவாள். ரமாநாத்துக்குத் தான் கூடையைத் தூக்கி வந்தது தெரியாமல் இருக்க வேண்டுமே யென்பதற்காக, அவள் தன் சிரமத்தைக் கூட அதிகமாக வெளியே காட்டிக் கொள்வதில்லை.

ஒருநாள் 'மனோரமா' தியேட்டரில் 'ராதே ஷியாம்' கம்பெனியின் புது நாடகம் ஒன்று நடப்பதாயிருந்தது. அந்த நாடகத்தைப் பற்றிப் புகழாதவர் இல்லை. அதைப் பார்க்கப் போகிறவர்கள் இரண்டொரு நாட்களுக்கு முன்பே இடத்துக்கு முந்திக் கொண்டு, 'ரிஸர்வ்' செய்து கொள்ளும் படிக்கூட இருந்தது.

ரமாநாத்துக்கும் அந்த நாடகத்தைப் பார்க்க வேண்டுமென்று ஆசை! 'எங்கும் இந்த நாடகத்தைப் பற்றியே பேச்சாக இருக்கிறதே, நாமும் போனால் என்ன?' என்று எண்ணினான். நாடகம் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் அத்தனை நாளும் அவனிடம் குடிகொண்டிருந்த பயம் எங்கேயோ மறைந்துவிட்டது! 'இவ்வளவு நாளும் பிடிக்காத போலீஸ் இன்றைக்கென்று நம்மை வந்து பிடித்துவிடப் போகிறதாக்கும்! வீணாக நான்தான் இல்லாததற்கெல்லாம் பயப்படுகிறேன். அப்படிப் போலீஸ் பிடிப்பதாயிருந்தால், தினம் நான் இரவு



வேளைகளில் வெளியில் புறப்படும்பொழுது பிடித்திருக்கக் கூடாதா? அதற்கு நம் ஒருத்தனைத் தேடுவதுதான் வேலையாக்கும்!' என்று மனதைத் தேற்றிக்கொண்டு, பத்து மணி சுமாருக்கு ரமாநாத் வீட்டை விட்டுப் புறப்பட்டான். அப்பொழுது தேவீதீன் எங்கேயோ போயிருந்தான். ரமாநாத் வெளியே போவதைப் பார்த்ததும் ஜபுலி, "எங்கே யப்பா போகிறாய், இந்த வேளையில்?" என்று கேட்டாள்.

ரமாநாத், "எங்கும் இல்லை, அம்மா! இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டு நகர்ந்தான்.

ரமாநாத் தெருவில் இறங்கினதுதான் தாமதம், அவனுடைய துணிச்சல் எல்லாம் பனிக் கட்டியைப் போல் கரையத் தொடங்கி விட்டது. 'பின்னால் யாராவது போலீஸ்காரன் வருகிறானோ?' என்ற சந்தேகம் அவனுக்கு அடிக்கொரு தரம் எழுந்தது. ஆகவே, அவன் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே அடி எடுத்து வைக்கலானான். 'ஒவ்வொரு போலீஸ்காரனுக்கும் நம்மைப் பற்றி நன்றாகத் தெரிந்திருக்கும். பார்த்ததுமே பனிச்

சென்று அடையாளம் கண்டு பிடித்து விடுவான்' என்பது அவனுடைய நினைப்பு. ஆகையால், அடிக்கொருதரம் திரும்பிப் பார்த்தால் சந்தேகத்துக்கு இடமாகும் என்ற எண்ணம் எழவே அவன் குனிந்த தலை நிமிராமல் நடக்கலானான். 'ரகசியப் போலீஸ்காரர்கள் சாதாரண உடையுடன் தான் சுற்றுவார்கள்' என்ற விஷயம் நினைவுக்கு வந்ததும், அவனைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்த ஓர் ஆள் மீது அவனுக்குச் சந்தேகம் தட்டியது; உள்ளூறத் திகிலும் எழுந்தது. 'ஆமாம், அவன் ஏன் நம்மை இப்படி விழுங்கிவிடுவது போல உற்றுப் பார்க்கிறான்? இப்படி நாம் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு போவதனால்தான் அவனுக்குச் சந்தேகம் தட்டுகிறாற்போலிருக்கிறது. 'சாலையில் போகிறவர்கள் நம்மைப் போல இப்படித் தலையைக் குனிந்து கொண்டா போகிறார்கள்? எல்லாரும் தலை நிமிர்ந்தல்லவா நடக்கிறார்கள்! வண்டியும், காரும், சைக்கிளும் போகும் ஜன நடமாட்டமுள்ள பாதையில், தலையைக் குனிந்து கொண்டு போனால் உயிருக்கே அல்லவா ஆபத்து விளையும்? சாலையில் போகும்போது தலை நிமிர்ந்து எதிரும் புதிரும் பார்த்துக் கொண்டு ஜாக்கிரதையாக அல்லவா நடக்க வேண்டும்? 'பார்க்'கில் தலையைக் குனிந்து கொண்டு, யோசனையில் ஆழ்ந்து தன்னை மறந்தவாறே நடந்தால்கூடப் பாதகமில்லை; சாலையில் தலை குனிந்த வண்ணம் நடப்பது ரொம்பத் தப்பு! ஆமாம், பக்கத்தில் வரும் மனிதன் இன்னும் நம்மை உற்றுப் பார்க்கிறானே! ஒருவேளை ரகசியப் போலீஸ்காரனாகத்தான் இருப்பானோ?' என்ற சந்தேகம் அவனுடைய உள்ளத்தை முற்றுகை யிடவே, 'எப்படியாவது இந்த ஆளிடமிருந்து தப்பினால் போதும்' என்று எண்ணிப் பக்கத்தில் இருந்த வெற்றிலைப் பாக்குக் கடைக்குள் நுழைந்தான். அந்த ஆசாமி தன் வழியே சென்று விட்டான். சமாசாரத்துக்கு அப்புறம்தான் சற்றுத் தைரியம் பிறந்தது. 'அப்பாடா!' என்று ஒரு நீண்ட மூச்சு விட்டான்.

வெற்றிலை வாங்கிப் போட்டுக் கொண்ட பிறகு அவன் மனதைத் திடப்படுத்திக் கொண்டு, தலை நிமிர்ந்து நடக்கலானான். இருந்தாலும், "இந்தச் சமயம் ஒரு டிராம் வண்டி வரக்கூடாதா? அதில் நாம் ஏறிக் கொண்டு போய் விடலாமே!" என்று நினைத்து அவன் திரும்பிப் பார்த்தான். ஆனால் கண்களுக்கு எட்டிய தூரம் வரை டிராம் வண்டியைக் காணோம். அவன் சில எட்டுக்கள்தான் எடுத்து வைத்திருப்பான்; பின்னாலேயே மூன்று கான்ஸ்டேபிள்கள் வந்து கொண்டிருந்தனர். அவர்களைக் கண்டதும் சமாசாரத்துக்குத் திகில் இன்னும் அதிகரித்தது. 'இதேதடா சனியன்!' என்று அவன் மனதுள் முணுமுணுத்துக் கொண்டான். பாம்புப் புற்றில் யாராவது வேண்டுமென்றே போய்க் கையை விடுவார்களா? ஆகவே, அவன் சாலையை விட்டுப் பிளாட்பாரத்தில் ஏறி நடக்கலானான். அவனுடைய போதாத காலம் என்றுதான் சொல்ல வேண்டும். ஓயாமல் ஒழியாமல் போவதும் வருவதுமாக இருக்கும் மோட்டார்களுக்கு அடிக்கடி விலகி இடம் கொடுக்க வேண்டியிருக்கும் தொந்தரவைச் சகிக்காமல், அந்த மூன்று கான்ஸ்டேபிள்களும் கூடப் பிளாட்பாரத்தில் ஏறிவிட்டனர். அதைக் கண்டதும் சமாசாரத்தின் உள்ளம் 'பக் பக்' என்று வேகமாக அடித்துக் கொள்ளத் தொடங்கியது. எதிர்ப்புறமிருந்த பிளாட்பாரத்துக்குப் போய்விடலாம் என்றாலோ, 'அவர்களுக்கு இன்னும் அதிக சந்தேகத்தை உண்டுபண்ணி விடுமே!' என்று அவன் அஞ்சினான்.

இது என்ன கூத்து? எதற்காக இவர்கள் நம்மையே இப்படி உற்றுப் பார்க்கிறார்கள்? 'நம்மைப் பிறர் அடையாளம் கண்டு கொள்ளாமல் இருக்க வேண்டுமே!' என்பதற்காக இவ்வளவு பெரிய முண்டாசு கட்டிக் கொண்டோமே! அந்த முண்டாசே யல்லவா நம்மைக் காட்டிக் கொடுத்து விடும்போலிருக்கிறது! நம் மூளையே மூளை!

ஆமாம், அந்த மூன்று பேரும் நம்மை இன்னும் உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறதே! அவர்கள் ஒருவருக்கொருவர் ஏதோ பேசிக் காதைக் கூடக் கடித்துக் கொள்ளுகிறார்கள் போலிருக்கிறதே! — நம்மைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறார்களோ?

சமாசாரத்துக்கு மேலே அடி எடுத்து வைக்க ஓடவில்லை. கால்கள் தடுமாறின. இனி தப்புவது ஏது? 'நாம் பிடிபட்டு விட்டோம்' என்ற விவரம் நம் வீட்டாருக்குத் தெரிந்தால் என்ன ஆகும்? பத்மா அழுது அழுது உயிரை விட்டு விடுவாள்! — ஆமாம், தண்டனை? — இந்த வருத்தத்துக்குக் குறையாது! நம் வாழ்வுக்கு இன்று முடிவுகாலம் வந்து விட்டது போலும்!

இந்த எண்ணம் சமாகாத்தை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது! அவனுக்கு உடல் பதறியது; உரோமம் சிலிர்த்தது. போலீஸ்காரர்கள் கிட்ட நெருங்க நெருங்க அவன் மனம் போன போக்கைச் சொல்லி முடியாது. அவனுக்குப் பேய் அறைந்தது போலிருந்தது. கண்களில் ஒரு விதக் கலக்கம் தாண்டவமாடியது. 'போலீஸாரின் கண்களில் படாமல், தன்னை எப்படியாவது காத்துக் கொள்ள வேண்டும்' என்ற எண்ணத்துடன், அவன் போகிறவர்களின் மத்தியில் ஒண்டிக் கொள்ளலானான். அவன் அப்படி நடந்துகொண்ட விதமும், விழித்த விழியும் சாதாரண ஆசாமிக்குக் கூடச் சந்தேகத்தை உண்டு பண்ணுவதாயிருந்தன. அப்படியிருக்கும் பொழுது போலீஸ் புலிகளின் கண்களிலிருந்து அவன் எப்படித் தப்ப முடியும்?

ஒரு போலீஸ்காரன் இன்னொருவனைப் பார்த்து, "அதோ பார் அப்பா, அந்த ஆளை! பக்காத் திருடனாயிருப்பான் போலிருக்கிறது! விழிக்கிற விழியைப் பார்!" என்றான்.

"ஆமாம், அப்பா! எனக்கும் சந்தேகமாகத்தான் இருக்கிறது! ஆள் கைகாரத் திருடனாய்த்தான் இருக்க வேண்டும்!" என்றான் இன்னொருவன்.

மூன்றாவது போலீஸ்காரன் கடுமையான குரலில், "டேய், முண்டாசக்காரா! இங்கே வாடா!" என்றான்.

சமாகாத் மிகவும் தைரியஸ்தனைப் போல, அவனைத் திரும்பிப் பார்த்தான்.

"இங்கே வா, அப்பா! உன் பெயர் என்ன? சொல்லு" என்று அதே கடுமையுடன் கேட்டான் அந்தப் போலீஸ்காரன்.

சமாகாத் ஒரு கணம் தயங்கி, "ஹீரா லால்" என்று பதில் சொன்னான்.

"எந்த ஊர்?"

"ஊரா?"

"ஆமாம் அப்பா, ஊர்தான்!"

"ஷாஜஹான்பூர்"


"எந்தத் தெரு?"

சமாகாத் இதுவரை ஷாஜஹான்பூருக்குப் போனதும் இல்லை; அந்த ஊரில் என்னென்ன தெருக்கள் இருக்கின்றன என்பதும் அவனுக்குத் தெரியாது. தெரிந்தால்தானே அவன் ஏதாவது ஒரு தெருவின் பெயரைச் சொல்லுவதற்கு? ஆகவே அவன் மென்று விழுங்கிக் கொண்டு, "என்னுடைய ஊர், பெயர் இதெல்லாம் கேட்டு நீ என்ன அப்பா செய்யப் போகிறாய்?" என்றான்.

கான்ஸ்டேபிள் எல்லாம் தெரிந்தவனைப் போல, "உன் ஊர், பெயர் எல்லாம் எங்களுக்குத் தெரியும். அப்பா! எத்தனை மாதங்களாக நாங்கள் உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறோம், தெரியுமா? இன்றைக்குத்தான் அகப்பட்டாய். வா, போலீஸ் ஸ்டேஷனுக்கு!" என்று சொல்லியவாறே சமாகாத்தின் கையைப் பிடித்துக் கொண்டான்.

சமாகாத் கையை விடுவித்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு, "முதலில் வாரண்டைக் காட்டு; அப்புறம் வருகிறேன்.

ஏன் ஓடினார்?



என்னையும் நீ காட்டுப்புறத்தான் என்று எண்ணி விட்டாயா, என்ன?" என்று முறைத்தான்.

"கையைப் பிடித்துக் கொள்ளப்பா! ஸ்டேஷனுக்குப் போய் இவருக்கு வாரண்டைக் காட்டிக் கொள்ளலாம்!" என்றான் ஒருவன்.

அதற்குள் இந்தக் காட்சியைப் பார்ப்பதற்காக ஒரு பெரும் கும்பல் சூழ்ந்து கொண்டுவிட்டது. தேவீதின் அப்பொழுது தான் அபினி வாங்கிக் கொண்டு அவ்வழியே திரும்பிக் கொண்டிருந்தான். மூன்று கான்ஸ்டேபிள்கள் ரமாநாத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டு போவதை அவன் பார்த்ததும், வேகமாக முன்னேறிக் கான்ஸ்டேபிள்களின் அருகில் சென்றான். "என்னுங்க ஐயா, இது? இந்த ஐயா நம் வீட்டுக்கல்லவா வந்திருக்கிறார்? இவரை ஏன் பிடித்து இழுத்துக் கொண்டு போகிறீர்கள்?" என்று கேட்டான்.

மூன்று கான்ஸ்டேபிள்களும் தேவீதினை நன்கு அறிந்தவர்கள். ஆகவே அவர்கள் சற்றுத் தயங்கி நின்றனர். ஒருவன், "உன் வீட்டுக்கு வந்திருக்கிறாரா? எத்தனை நாளாக?" என்று கேட்டான்.

தேவீதின் மனத்துள் கணக்குப் போட்டுப் பார்த்துக் கொண்டு, "நான்கு மாதங்களுக்கு மேலாகிறது. நான் இவரைப் பிரயாகையில் பார்த்தேன். இவருக்குச் சொந்த ஊரும் பிரயாகைதான். என்னுடன் தான் வந்தார்" என்றான்.

"இவருடைய பெயர் என்ன?"

தேவீதின் சற்றுத் தயக்கத்துடன், "இவர் ஒன்றும் தன் பெயரைச் சொல்லவில்லையா?" என்று கேட்டான்.

போலீஸ்காரர்களுக்குச் சந்தேகம் வலுத்தது. ஒருவன் கண்களை உருட்டிச் சுழற்றிக் கொண்டு, "இந்தக் காரியத்துக்கு நீயும் உடந்தை போலிருக்கிறது. இல்லாவிட்டால் இவனுடைய பெயரைச் சொல்ல ஏன் யோசிக்கிறாய்?" என்றான்.

தேவீதின் குருட்டுத் தைரியத்துடன், "திறந்தப்பா! உன் உருட்டலுக்கும் மிரட்டலுக்கும் நான் பயந்தவனில்லை!" என்று ஆரம்பித்தான்.

"என் தாத்தா, சும்மாக் கோவிச்சுக்கிறீங்க? இவர் பெயரைச் சொல்ல உங்களுக்கு என்ன ஆட்சேபனை?" என்றான் இன்னொருவன்.

தேவீதின் பயந்த பார்வையுடன் ஒரு முறை ரமாநாத்தைப் பார்த்தான். பிறகு, "நாங்கள் இவரை 'ரமாநாத்' என்று கூப்பிடுகிறோம். உண்மைப் பெயர் என்னவோ? எங்களுக்குத் தெரியாது." என்றான்.

"என் ஐயா, உனக்கு எத்தனை பெயர்கள்? ரமாநாத்தும் ஹீராலாலும் மட்டும்தான் உன் பெயரா? அல்லது இன்னும் வேறு ஏதாவது பெயர் இருக்கிறதா? உண்மையைச் சொல்லு" என்றான் மற்றொருவன்.

பிறகு, அவர்கள் அங்கே கூடியிருந்த கும்பலைப் பார்த்து, "பார்த்தீர்களா, ஆசாமியை! பெயர் ரமாநாத்தாம். ஹீரா லால் என்று புளுகுகிறான். இவன் திருடன் தான் என்பதற்கு இதைவிட வேறென்ன வேண்டும்?" என்றார்கள்.

உடனே அந்தக் கும்பலில் இருந்தவர்களெல்லாம் ரமாநாத்தைப் பற்றி விமரிசனம் செய்யத் தொடங்கினார்கள்.

"சந்தேகப்பட வேண்டிய விஷயம் தான்!" என்றான் ஒருவன்.

"சந்தேகமா? பெயரையும் ஊரையும் மாற்றிப் புளுகியிருக்கிறான். வேறென்ன வேண்டும்?" என்றான் இன்னொருவன்.

"பெரிய முடிச்சுமாறிப் பயலாகத்தான் இருக்கவேண்டும்!" என்றார் ஒரு மார்வாடி.

"பகற் கொள்ளையடிக்கும் பக்காத் திருடன் ஐயா, இவன்!" என்றார் ஒரு மௌல்வி.

கும்பலில் உள்ளவர்கள் தன் கட்சியை விரும்பாததைக் கண்டதும் போலீஸ்காரர்களுக்கு இன்னும் சௌகரியமாகப் போய் விட்டது. ரமாநாத்துக்கும், 'அவர்களிடம் வாலாட்டாமல் போவதுதான் உசிதம்' என்று பட்டது. ஆகவே அவன் வாய் திறவாமல் தலையைக் குனிந்து கொண்டு போலீஸ்காரர்களுடன் சென்றான்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் போலீஸ் ஸ்டேஷன் கண்களுக்குத் தெரிந்தது. வரவரக் கும்பலும் குறைந்து விட்டது.

அந்தக் கூட்டத்தைப் பார்க்க ரமாநாத்துக்கு வெட்கமாயிருந்தது. ஆயினும், தேவீதின் அந்தக் கூட்டத்தோடு சேர்ந்து தன்னைத் தொடர்ந்து வருகிறானே என்ற நம்பிக்கையுடன் அவன் ஒருமுறை கூட்டத்தை நோக்கினான். தேவீதினைக் காணோம்! ரமாநாத்தின் உள்ளக் கிடக்கையிலிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு எழுந்தது. இந்த ஆபத்து வேளையில் இருந்த ஒரே ஒரு உதவியும் கையை விட்டு நழுவி விட்டதோ?

(தொடரும்)

No. 2.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI டிசம்பர் 7, 1947 4 அண

REGD. No. M. 4392

License No. 18
Licensed to post without prepayment



[illegible]: 112, [illegible]
[illegible] 93, [illegible]